பொதுசன நூலகம்
[illegible] படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

C/423
Job! With High Salary
Follow

Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | மாசி 15 | ஞாயிற்றுக்கிழமை | (27.02.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 150

## தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாட்டை ஜனாதிபதி மகிந்த ஆரம்பித்து வைத்தார்


(கொழும்பு)

தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் 46 ஆவது மாநாடு நேற்றுமுன்தினம கொழும்பில் நடைபெற்றது. மத்திய வங்கி கட்டடத் தொகுதியில் நடந்த இம்மாநாட்டினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, எதிர்கால நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்கு புதிய நிதி ஒழுங்கு அவசியம் எனத்தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் நாம் உலகப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் சர்வதேச பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்கு ஏற்றவகையில் ஒரு புதிய நிதி ஒழுங்கையும் மாதிரியையும் நாம் கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி சர்வதேச பொருளாதார நெருக்கடி எமக்குப் பல பாடங்களைக் கற்றுத்தந்துள்ளது. அந்தப்பாடங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும். என்றாலும் இந்த நெருக்கடியில் ஒவ்வொரு நாட்டுக்கும் தனிப்பட்ட பாடங்கள் இருக்கும் அதேநேரம், எல்லா நாடுகளுக்கும் பொதுவான பாடங்களும் உள்ளன. பொதுவாக இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கின் மீள்கட்டுமானத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி!

(கொழும்பு)

**யுத்தத்துக்குப் பின்னரான வடக்கின் மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் நிதி உதவி வழங்கவுள்ளது. குறிப்பாக வடபகுதியில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்திட்டங்களுக்கும் கல்வியை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்குமே ஐரோப்பிய ஒன்றியம் அதிகளவு நிதியுதவிகளை கடந்தகாலத்தில் வழங்கியுள்ளது.**

இவ்வாறான உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

போருக்குப் பின்னரான விடயங்களில் முன்னுரிமை கொடுக்கப்படுகின்ற விடயங்களை வகைப்படுத்தல் தொடர்பில் இலங்கை விஜயத்தின் போது விரிவாக கலந்துரையாடியுள்ளதாகவும் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றிய குழுவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் லெம்பர்ட் தெரிவித்தார்.

அதேவேளை, மெனிக்பாம் முகாம்களில் வாழ்கின்ற மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களில் குடியேற்றப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவர்களுக்கான (11 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். நகரில் டெங்கு நோய் பரவல்; இப்போது அது பூரண கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக யாழ்.மாநகர சபையின் புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலேயே அண்மைக்காலமாக இந்நோயின தாக்கம் காணப்பட்டிருந்தது.

கடந்த மாரிகாலத்தில் இந்நோயினால் பாதிப்புக்குள்ளாகிய பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்ததாக யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இப்புள்ளி விபரங்களின்படி கடந்த மாதம் 30 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாகவும் அத்தொகை இம்மாதம் மூன்று பேராக குறைந்துள்ளதாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு ஜனாதிபதி கொழும்பில்



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் நஸீடுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் நேற்று சனிக்கிழமை இரு தரப்புப் பேச்சு இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வடக்கில் கண்ணிவெடி அபாயம் வறியமக்களை நோக்கி நகருகிறது

(கொழும்பு)


நிலக்கண்ணி வெடியின் உதிரிப் பாகங்களை பழைய இரும்புப் பொருளாக விற்பனை செய்வதற்கு சில வறிய மக்கள் முயற்சிப்பதாக மைன் எக்சன் என்ற சுவிட்சர்லாந்து தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் இலங்கைப் பொறுப்பாளர் நைஜல் ரொபின்சன் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியின் மூலம் நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டதாகவும் இதனல் 54000 இடம்பெயர் மக்களை மீள்குடியேற்ற முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் சுமார் 20,000 நிலக்கண்ணி வெடிகளை தமது அமைப்பு அகற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெரியதம்பனை முதல் ஓமந்தை வரையில் புதைக்கப் (1[illegible] ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட கண்ணிவெடி அகற்றலை துரிதப்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தும் முகமாக கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொதுமக்களின் மீள்குடியேற்றத்திற்கு பிரதான தடையாக கண்ணிவெடி மற்றும் மிதிவெடி அபாயம் காணப்படும் நிலையில், இது குறித்த தகவல்கள் அரசாங்க அதிகாரிகளினாலும் பாதுகாப்புத் தரப்பினராலும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தன. தற்சமயம் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், அதனை துரிதப்படுத்துவது குறித்து பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலக உயரதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் யாழ். பணிமனையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் மிதிவெடி செயற்பாட்டுக் குழு தலைமை அதிகாரி முருகதாஸ் தலைமையிலான பணிமனை உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டனர். மிதிவெடி அகற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்களுக்கு பிடியாணை

## விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கவும் உத்தரவு

(கொழும்பு)

தடை விதிக்கப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வு இயக்கத் தின் செயற்பாட்டாளர்கள் ஐவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்து மாறு கொழும்பு நீதிவான் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் நீதி மன்றை அவமதித்து வருவதாக அரச சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்ததை அடுத்து, அவர்க ளைக் கைது செய்து நீதிமன்றில ஆஜர்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் குற்ற விசாரணைத் திணைக்களத்திற் குப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென தமிழ் புனர் வாழ்வு இயக்கத்திற்கு வழங் கப்பட்ட நிதியை புலிகளுக்கு ஆயுதம் கொள்வனவு செய்ய வழங்கினார்கள் என சந்தேகநபர் களுக்கு எதிராகக் குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் நிதி தொடர் பான புலனாய்வுப் பிரிவினரால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குற்ற விசாரணைப் பிரிவி னர் விசாரணைகளை ஆரம்பித் துள்ளதுடன், குறித்த இயக்கத்திற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான வழககு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது விசாரணை அறிக்கை சமர்ப் பிக்க வேண்டுமென நீதிமன்றம் குற்ற விசாரணைப் பிரிவின ருக்கு உத்தரவிட்டுள்ளளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஜப்பான் 1.2 மி.டொலர் நிதியுதவி

(கொழும்பு)

மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்க ளுக்கு நிவாரணம் வழங்க வென ஜப்பான் அரசாங்கம் 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் களை வழங்கியுள்ளது.

இடம்பெயந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், புனர மைப்பு நடவடிக்கைகளுக்காக வும் ஜப்பான் அரசாங்கம் இந்த நிதியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நிதியை இலங்கை அரசாங்கத்திற்கும் இராஜதந்திர நிறுவனங்களுக்கும் வழங்க நட வடிக்கை எடுத்ததாக இலங் கைக்கான ஜப்பான் தூதுவர் க்ருனியோ தகாசி தெரிவித்துள ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நிவாரண நடவடிக்கை களை ஜப்பான் பாராட்டியுள்ளது.

# ஜே.வி.பி - ஆளும் கட்சி மோதல்; ஐவர் படுகாயம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை - வீரவில பிரதேசத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் உள்ளூ ராட்சி ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் இடம்பெற் றுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியள வில் ஏற்பட்ட இந்த மோதலில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தெபர வெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் திஸ்ஸ மகாராம பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர.



உலகக் கிண்ணத் தொடரின் அவுஸ்திரேலியா - இலங்கை அணிக ளுக்கு இடையில் இடம்பெறவுள்ள சர்வதேச ஒருநாள் போட்டிக்கான 50 ரூபா பெறுமதியான நுழைவுச் சீட்டு இன்று மாளிகாவத்தை பி.டி.சிறிசேன விளையாட்டரங்கில் விற்பனை செய்யப்பட்டது. இதன்போது அனுமதிச் சீட்டுக்களை கொள்வனவு செய்ய ரசிகர்கள் முயற்சிக்கும் விதம்.

# குறும்படங்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியின் மாணவர் ஒளிப்படக் கலைக் கழகம் நடத்தும் குறும் படங்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசு வாமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

செல்வன் க.உஷாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தி னராக நிறுவன AAA Movies



யாழ்.பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படு வதையும், பிரதம விருந்தினராகக் கலந்கொண்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உரையாற்றுவதையும், இடைவேளை நிகழ்வாக உடற்பயிற்சி நடைபெறுவதையும் படத்தில் காணலாம். (52)


28 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

27.02.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்நாளைக் கொண்டாடும் தோழர்

எஸ்.விஜயகாந்த் அவர்களை

யாழ்.மாநகர சபை உறுப்பினர், (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)

பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



தேசத்தில் நேசம் கொள்வதோடு
எங்கள் தேவையிலும் நேசம் கொள்ளும்
அன்புள்ளம் கொண்டவரே!

தேவைகளைக் கேட்டறிந்து
குறிப்புணர்ந்து செயற்படும்
தங்கள் பெருமை யாரிடமுண்டு!

நீண்ட ஆயுளோடும்
நிம்மதியான வாழ்வோடும்
நீங்கள் தலைநிமிர்ந்து வாழ
தங்கள் 28ஆவது அகவையில்
மனம் நிறைத்து
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும் அன்புத் தம்பிமார்கள்:

திலீபன், சிறி, முந்தன், நிமல், நிக்சன், மயூரன், தக்க, ரீரோ, கரன், கீபன், சீசோன், றிசாத், நவராஜ், பிறைனஸ்

(C/484)

(C/484)


# கற்பிட்டிக் கடற்பரப்பில் கரையொதுங்கிய கடற்குதிரை

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பரப்பில் கரை யொதுங்கிய மிக நீளமான கடற்குதிரை நேற்று சனிக் கிழமை மாலை பொதுமக்க ளால் மீட்கப்பட்டுள்ளது.

பொதுவாகக் கடற்குதிரை கள் ஒன்றரை அங்குலம் நீள மானவையாகும்.

எனினும் குறித்த கடற் குதிரை 11 அங்குலம் நீளமா கும்.

இது இலங்கையில் மீட்கப் பட்ட மிகப்பெரிய கடற்குதிரை யாகும்.


## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

கட்டுமண் 1கியூப் -11,000, அத்திவாரக்கருங்கல் 6X9, 1கியூப்- 9000, ஒரு அரிகல் 40 ரூபா, 3/4" கருங்கல்லு சல்லி ஒரு கியூப் -13000. அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக் கழிவு உண்டு. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக் கும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0776253719 (R/059)



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P: 0719315664, 0777569205

**மீண்டும் யாழில்**

26.02.2011 - 03.03.2011 வரை
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
பதிவுக்கட்டணம் 300.00

☆ ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

☆ **பாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.**

☆ இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**கமால் ரூரிஸ் இன்**

(சிவதர்சன் எலைக்ரிக்கல்ஸ் அருகில்),
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C/486)

கிழிந்த மட்டையில் இருந்து சிதறி நாலா பக்கங்களிலும் ஓடிய கடுகைப்பொறுக்கி எடுப்பது மிகக்கஷ்டம். அதுபோல பல திசைகளிலும் ஓடி உலக விஷயங்கள் பலவற்றில் உழலும் மனத்தைக் குவியச் செய்து, ஒருமைப்படுத்துவது எளிதான காரியமன்று. - இராமகிருஷ்ணர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஆத்மாக்கள் பெறுமதியானவை

யாழ்.மாவட்டத்தின் வீதிகள் யாவும் தற்போதுள்ள நிலையில் பயணிக்க முடியாத அளவுக்கு சீர்கெட்டுள்ளதை யாவரும் அறிந்ததொன்றே.

இந்நிலையில் வீதிப்போக்குவரத்து நடைமுறைகளையும், ஒழுங்கு விதிகளை மீறிய நிலையிலேயே வாகனங்கள் செலுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. இது எந்தளவுக்குப் பயணிகளைப் பாதிக்கும் என்பதை வாகன ஓட்டுநர்கள் அறிய முயல்வதில்லை.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வாகனம் செலுத்துபவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை எழுந்தமானத்தில் வழங்குவதில்லை. எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை என்பனவற்றில் சித்தி அடைபவர்களுக்கே இவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது தான் நடைமுறையில் உள்ளது.

பரீட்சைகளில் சித்தி பெறுவதை நோக்கமாகக் கொண்டு விண்ணப்பித்து அதன் பெறுபேற்று அடிப்படையில் அனுமதிப் பத்திரத்தைப் பெறுபவர்கள் சில சமயங்களில் வீதிப்போக்கு வரத்து ஒழுங்கு விதிகளை மதிக்கத் தவறுவதுடன், அவற்றை மீறியும் வருகின்றனர்.

ஒழுங்கு விதிகளை மீறுபவர்கள் ஒன்றை மட்டும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். வாகனங்களைச் செலுத்தும் வேகத்தையும், அதன் கட்டுப்பாட்டையும் சமாளிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், இரவு நேரங்களில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளில் ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் தமது வாகனங்களுக்குரிய வெளிச்ச வரம்பை மீறிச் செலுத்துவதால், வீதிகளில் பயணம் செய்யும் ஏனைய பயணிகள் எதிர்பாராதவிதமாக விபத்துக்களைச் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

வாகனங்களை கண்ணைப் பறிக்கும் வர்ண விளக்குகளால் அலங்கரித்து வீதிகளில் பவனி வருவதால், அவர்களுக்கு அவ் விளக்குகளுக்கு தம் கண்களைப் பறிகொடுத்து கும்மிருட்டினுள் செல்லவேண்டியவர்களாக உள்ளார்கள்.

ஆடம்பர சொகுசு வாகனங்களும், முச்சக்கர வண்டிகளுமே இவ்வாறு அலங்காரங்களுடன் செல்வதையும் இவற்றால் தினமும் இரவுப் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் அனுபவிக்கும் துன்பதுயரங்களும் கொஞ்ச நஞ்சமல்ல.

இரவு வேளைகளில்தான் இந்தத் துன்பங்கள் என்றால், பகல் வேளைகளில் வீதிகளில் ஓடுவதற்குத் தகுதியற்ற, கரும்புகைகளைக் கக்கும் வாகனங்களின் நடமாட் டத்தால் பயணிகள் கண்களையும், மூக்கையும் பொத்திக் கொண்டு செல்ல வேண்டிய நிலையுள்ளது.

தரச் சான்றிதழ் அனுமதியைப் பெறாமல், வாகனங்களை வீதிகளில் நடமாடவிடுபவர்களின் வாகன உரிமங்களை இரத்துச் செய்வதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அதிகாரம் உண்டு.

கரும் புகைகளைக் கக்கும் வாகனங்கள் வீதிகளில் நடமாடுவதால், அவற்றினால் மக்கள் நோய்களுக்கு ஆளாகிப் பெரும் சுகாதாரச் சீர்கேட்டையும் எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அனுமதி பெறப்படும்போது புகை கக்காத வாகனங்கள் அனுமதி பெற்றபின் சில சமயங்களில் புகைகளைக் கக்கி வருவதாகவும் விமர்சிக்கப்படுகிறது. இவ் விமர்சனத்துக்குரிய தவறு எங்கேயோ உள்ளது. இதனைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, குடாநாட்டின் வீதிகள் அனைத்திலும் மரணப் பொறிக்கிடங்குகளையே காணக் கூடியதாக உள்ளது.

பெருமழை பொழிவினால் ஏற்பட்ட இப்பொறிக் கிடங்குகள் சீர்செய்யப்பட்டு வருகின்றபோதும், அவற்றை முற்றாக உரியவர்களினால் சீர்செய்ய முடியாதிருப்பது கவலையளிப்பதாக உள்ளது.

மழை ஓய்ந்து தற்போது கடும் உஷ்ணம் உள்ள புழுதிகளாலும் பயணிகள் அளெகரியத்துக்குள்ளாகி வருகின்றனர். விபத்துக்கள் ஒரு புறம், சுகாதாரப் பாதிப்புக்கள் ஒரு மறுபுறம் என எல்லாம் ஒன்று சேர்ந்து பல விதத்திலும் பாதிக்கப்பட்ட எம்மக்களையே மீண்டும் மீண்டும் பாதிக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இன்றைய எதிர்பார்ப்பாகும்.

- ஆசிரியர்.

# யாழில் விசா பெறுவதில் மொழிப் பிரச்சினை

## 8 பேர் விண்ணப்பம்; ஒருவர் நிராகரிப்பு

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு இந்தியா செல்வதற் கான விசா நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் 8 பேர் இந்தியாவிலுள்ள உறவினரின் திருமண வீட்டுக்குச் செல்வதற்காக விசா அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள இந்திய விசா அலுவலகததில் சமர்ப்பித்திருந்தனர்.

விசா அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து அவணங்களையும் சமர்ப்பித்த 8 பேரில் 7 பேருக்கு விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒருவருக்கு விசா நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக விசா நிராகரிக்கப்பட்ட நபர் யாழ்ப்பாணத்திலுள்ள விசா அலுவலகத்திற்கு நேரில் சென்று கேட்டதாகவும் அதற்குக் கடமையில் இருந்தவர்கள் பலாலியிலுள்ள இந்திய உயர்ஸ் தானிகராலயத்திற்குச சென்று கேட்குமாறு கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இறுதியாக பலாலியிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்திற்குச் சென்று கேட்டதற்கு அவர்கள் கொழும்பிலிருந்து நிராகரிக்கப்பட்டே வந்ததாக தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த விசா அலுவலகங்களில் கடமையாற்றுபவர்கள் ஹிந்தி மொழியில் கதைப்பதாகவும் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருப்பதாகவும் தெரிவிகப்படுகிறது.

இத்தகைய நிலையில் யாழ். குடாநாட்டு மக்கள் இந்த விசா அனுமதியைப் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (18)

## கம்பன் கழகம் நடத்தும் போட்டிகள் முடிவு திகதி மார்ச் 10 வரை நீடிப்பு

கொழும்புக் கம்பன்கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் கம்பன் விழாவினையொட்டி நடத்துகிற கவிதை, பேச்சுப் போட்டி பற்றிய விபரங்கள் ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்தன. அமரர் துரை விஸ்வநாதன், அமரர் பொன் பாலசுந்தரம் ஆகியோரின் நினைவாக நடாத்தப்படும் இப் போட்டிகளின் முடிவு திகதி மார்ச் 10 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

35 வயதுக்குட்பட்ட போட்டியாளாகள் தமது முழுப்பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், கலந்துகொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, இல 12, இராமகிருஸ்ண கார்டன், கொழும்பு - 6 எனும் முகவரிக்கு மார்ச் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். ஒருவரே இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியும். போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும்.

மேற்படி கவிதை, பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் உடன் வழங்கப்படும் தலைப்புக்களில் கவிதை இயற்றவும் பேசவும தகுதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். போட்டியாளர்களின் தமிழறிவும் பரிசுத் தகுதியின் போது கணிக்கப்படும்.

பேச்சு மற்றும் கவிதைப் போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப் பெறும் முதல் மூன்று போட்டியாளாகளுக்கும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் எனவும் கொழும்புக் கம்பன்கழகம் அறிவித்துள்ளது. மேலும், போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## நோயாளரைப் பார்வையிடுவதில் பார்வையாளர் சிரமமடைகின்றனர்

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் உறவினர் ஒருவரைப் பார்வையிடச் சென்றவர் மாலை.5.45 மணியளவில் அனுமதி மறுக்கப்பட்டு வீடு திரும்பியுள்ள சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த குறித்த நபர் அவசர அவசரமாகப் புறப்பட்டு விடுதியில் அனுமதிக்கப் பட்டிருக்கும் தனது உறவினரைப் பார்வையிடச் சென்ற போது, வாயிலில் காவல் கடமையில் நின்றவர்கள் பார்க்க முடியாது என்று தடுத்துள்ளனர். "இப்பொழுது நேரமென்ன?" என்று கேட்ட பொழுது அதற்கு பதில் கூறாது, "பார்க்க விரும்பினால் பாஸ் கொண்டு வாரும்" என்று சுருக்கமான பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயளியைப் பார்வையிட முடியாமல் பருத்தித்துறைப் பேருந்தைப் பிடிப்பதற்காக குறித்த நபர் திரும்ப நேர்ந்துள்ளது. ஆகவே பார்வை நேரம்5.00 மணியிலிருந்து 6.00 மணி வரை என்பதன் அர்த்தம் என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை எனப் பார்வையிட வருவோர் வெளியிட்டுள்ளனர்.

மக்கள் சேவை, மகேசன் சேவையென்பதை இவர்கள் விளங்கிக்கொள்வார்களா? உரியவர்கள் இது விடயத்தில் கவனமெடுப்பது விரும்பத்தக்க்தென தெரிவிக்கப் படுகிறது. (மா)

## சிவராத்திரி விழாக்கள்

(கொக்குவில்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு - ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் 2 - ஆம் திகதி புதன்கிழமை மகாசிவராத்திரி விரத பூசைகள் மிகவும் சிறப்பாக நடைபெறுமெனத் தெரிவிக்கப் படுகிறது.

மாலை 5 மணிக்கு விசேட அபிசேகம் ஆராதனையுடன் பூசைகள் தொடங்கும். நான்கு சாமப் பூசைகளும் - நள்ளிரவு 12 மணி தொடக்கம் 2 மணி வரையான லிங்கேற்பவ பூசையும் நடைபெறும்.

விசேட சமயச்சொற்பொழிவு, வில்லுப்பாட்டு மற்றும் கதாப் பிரசங்கம் ஆகியனவும் விழித்திருக்கும் விரதாதிகளுக்கு விருந்தாக்க இருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (68)

(சுழிபுரம்)

சுழிபுரம் சம்பு நாதேஸ்வரி சமேத சம்பு நாதேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவராத்திரி மகோற்சவப் பெருவிழா கடந்த செவ்வாய்க கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 1 ஆம் திகதி செவ்வாயக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும மறுநாள் தேர்த்திருவிழாவும் இடம பெறவுள்ளது. தேர்த்திருவிழா அன்று 'மகோற்சவத்தில் ரதோற்சவம்' எனும் தலைப்பில் தெய்வீகப் பேருரையாளா மதுரகவி காரை எம்பி அருளானந்தனின் சொற்பொழிவு இடம்பெறும்.

அன்று இரவு நான்கு ஜாமங்களும் சிவராத்திரியினையொட்டி விசேட அபிசேக வழிபாடுகளும் இடம பெறும். (60)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகவான் சிறி சத்தியசாயி சேவா நிலையத்தின் மகாசிவராத்திரி தின விழா எதிர் வரும் பங்குனிமாதம் 2 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் முதலாம் சாமப் பூசை மாலை 7 மணிக்கும் இரண்டாம் சாமப்பூசை இரவு 9.45 மணிக்கும், மூன்றாம் சாமப் பூசை அதிகாலை 2.45 மணிக்கும் நான்காம் சாமப்பூசை அதி காலை 3.50 மணிக்கும் நடை பெறவுள்ளது என சாய்சேவா நிலையம் அறிவித்துள்ளது. (109)

## முறைசாராக் கல்வி பயில அனுமதி பெற்றோர் விபரம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப்பாடசாலைகளில் முறைசாராக் கல்வி பயில்வதற்கு விண்ணப்பித்தவர்களில் இலவச பயிற்சிகளைப் பெறுபவர்கள் தங்களுக்கான அனுமதிக்கடிதங்களைத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத் தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

சி.திவ்யா, வி.அகலினி, க.மனோஜா, சி.யசோ (கணினிப் பயிற்சி. மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), யோ.விஜிதா (உடை அமைத்தல் பயிற்சி மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்) ஆகியோரை அனுமதிக் கடிதம் பெற்றுப் பயிற்சியில் இணைந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (11)

# சின்னஞ் சிறு செய்திகள்

## பொதுச் சபைக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஆ.நா.செல்வராசா தலை மையில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர்களை மேற்படி பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கல்லூரியின் வளர்ச்சி பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆ.நா.செல்வராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

## செயலமர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான வடமாகாண கல்வித் தரத்திலான செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது இச் செயலமர்வில் கலந்துகொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

## நினைவுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியான தோழர் சண்முகதாசனின் நினைவுதினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு ஆரியகுளம் முன்பாக உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இடதுசாரி இயக்கப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தவுள்ளனர். (10)

## உதவிக் கரம் நீட்டுங்கள்



(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கோப்பாய் கரந்தன் வீதியைச் சேர்ந்த 8 வயதுடைய செல்வன் சிறிகாந்தன் திலுக்ஷன் சிறுநீர்ப்பை பாதிப்பினால் சரியான முறையில் இயங்க முடியாத நிலைகாணப்படுவதால் சத்திர சிகிச்சை மூலம் சீர்ப்படுத்துவதற்கு 2 லட்சம் ரூபா நிதி தேவைப்படுகிறது.

எனவே கருணை உள்ளம் படைத்தவர்கள் நிதியுதவியை வழங்குமாறு கோப்பாய் லயன்ஸ் கழகம் கேட்டுக்கொள்கின்றது.

நிதியுதவி வழங்குபவர்கள் திருநெல்வேலியிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிக்கிளையில் 144020002021 என்ற கணககு இலக்கத்தில் வைப்பிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரத்தப் பரிசோதனை

(வடமராட்சி)

வடமராட்சியிலுள்ள அல்வாய்ப் பகுதியில் சுகாதாரப் பரிசோதகர் வீடு வீடாகச் சென்று இரத்தப் பரிசோதனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள ஒரு பாடசாலை மாணவன் காய்ச்சல் காரணமாக மரணமடைந்தை அடுத்தே இப்பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு டெங்குக் காய்ச்சல் இருக்கலாம் என்ற சந்தேகத்தினாலேயே இப்பரிசோதனையை சுகாதாரப் பரிசோதகர்கள் மேறகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

# சட்டவிரோத மதுபான விற்பனை; தடுத்து நிறுத்துவது எப்போது?

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் பரவலாக சட்ட விரோதமாக மதுபான விற்பனை இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அல்லைப்பிட்டி பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் இல்லாமையினால் மதுபானங்களைப பெற்றுக்கொள்வதற்கு வேலணைப் பிரதேசத்துக்கு அல்லது யாழ்ப்பாணப் பிரதேசத்துக்குப் பல மைல்தூரம் கடந்து சென்றே மதுபானத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை உள்ளமையே இவ்வாறு சட்ட விரோதமாக விற்பனை செய்வதற்கு வாய்ப்பாக அமைவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பிரதேசத்தில் பரவலாக வீடுகளில் மதுபான விற்பனை நடைபெறுவதால் பல சமூகச் சீர்கேடுகளுக்கு வழி வகுக்கும் எனவும், இவ்விற்பனையினைப் பலர் ஒருபகுதித் தொழிலாகக் கொண்டுள்ளமையால் பல்வேறுபட்ட தகராறுகளுக்கு வழிகோலும் எனவும் அப்பகுதி சமூக நலன்விரும்பிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் பொலிஸார், மதுவரித் திணைக்களத்தினரது பிரசன்னம் போதியளவு இன்மையே மேற்படி செயற்பாடுகளுக்குப் பலர் துணிந்து செய்வதற்கு ஏதுவாக அமைவதாகவும் எந்நேரமும் எப்போதும் மதுபானம் கிடைப்பதினால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு இப்பகுதி மக்கள் முகம கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமப் பகுதியில் இடம் பெறும் சட்டவிரோத மதுபான விற்பனையினை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள், சமூக நலன்விரும்பிகள், பொது அமைபபுக்கள் என்பன எதிர்பார்த்து நிற்கின்றனர். (27)

# வாகன உரிமை மாற்றத்திற்கு முன் கூட்டிப் பதிவு செய்யலாம்

(அச்சுவேலி)

வாகனங்களைப் பெயர் மாற்றம் செய்ய விரும்பும் வாகனச் சொந்தக்காரர்கள் தமக்குரிய பிரதேச செயலகங்களில் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொண்டு பெயர் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருட ஆரம்பத்தில் பிரதேச செயலகங்களில் வாகன வரி செலுத்துவதற்காகத் தினமும் காலை வேளைகளில் நூற்றுக்கணக்கான வாகன உரிமையாளர்கள் வருவதால் நெருக்கடி நிலையைத் தவிர்க்கும் வகையிலேயே தற்போது இம் முன் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் வாகனப் பெயர் மாற்றம் செய்ய விரும்புவோரை மதிய வேளைக்குப் பின்னரே உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# தனிமையில் இருந்த பெண்ணிடம் பணம், தங்க மோதிரங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஷாத் வீதி சவுதிலேன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் அங்கிருந்து பத்துத் தங்க மோதிரங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவையும, கைத்தொலைபேசியையும் திருடிச் சென்றுள்ளனர்.

மேற்படி பகுதியில் வசிக்கும் பாக்கியராசா புனிதவதி என்பவரது வீட்டிலேயே இத் திருட்டுச் சம்பம் நடைபெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவத்தின் போது தூக்கத்தில் இருந்த பெண்ணின் கையில் அணிந்திருந்த வளையல்களைத் திருடன் கழற்றும்போது விழித்துக் கொண்ட பெண் திருடனுடன் சண்டையிட்டுக்கொண்டு திருடன் திருடன் என்று கூக்குரலிட்டுக் கத்தினார். இதனைக் கேடடு அயலவர்கள் ஓடிவருவதனை அவதானித்த திருடர்கள் ஓட்டம் பிடித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாரும், இராணுவத்தினரும் ஸ்தலத்திற்கு விரைந்து குறித்த வீட்டாரின் முறைப்பாட்டைப் பதிவு செய்து சென்றனர்.

குறித்த பெண் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவா எனவும், 2004 ஆம் ஆண்டில இருந்து ஆஷாத் வீதியில் குடியிருந்து வருகின்றார் எனவும் சம்பவ நேரத்தில் இவர் தனிமையாக இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (19)

# சேவை நலன் பாராட்டு விழா

(பருத்தித்துறை)

கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் மா.வெற்றிவேலுவின் சேவை நலன் பாராட்டுவிழா இன்று பி.ப. 3மணிக்கு பாடசாலை மண்டபத்தில் புதிய அதுபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினரால மக்கள், மாணவர்கள் நலன் கருதி காரைநகர் வீதி வழக்கம்பரை, சங்கானையில் றெட்மோ நெற்கபே என்னும் ஸ்தாபனம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குப் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இநநிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (70)

# இளைஞர்கள் அட்டகாசம்; பயணிகள் பெரும் சிரமம்

(கரணவாய்)

நெல்லியடியை அண்டிய வெளிப் பிரதேசங்களான சோனப்பு, சுடலையடி, உப்பு றோட்டுப் பகுதிகளில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் அப்பகுதியால் பெண்கள், பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணம் செயய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் கூட பயப்பீதியுடன் பயணம் செய்வதாகவும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை யார் தட்டிக்கேட்பது எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (18)

# நவீன வசதியுடன் பிரதேசசபைக்கு புதிய கட்டடம் அமைப்பு

(அச்சுவேலி)

வலி.கிழக்குப் பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிற்கு உட்பட்ட அச்சுவேலிப் பிரதேச சபை உப அலுவலகத்திற்கான புதிய கட்டட நிர்மாணப் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றது.

அச்சுவேலி மத்திய பேருந்து தரிப்பு நிலையத்திற்குக் கிழக்குப் புறமாக முன்னர் இப்பிரதேச சபை உப அலுவலகம் இயங்கிய அதே இடத்தில் பிரதேசசபைக் காணியில் பல மில்லியன் ரூபா செலவில் இக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. அலுவலக நிர்வாகப் பிரிவு மற்றும் நூலக வசதி என பனவற்றினை உள்ளடக்கியதாக நிர்மாணிக்கப்படவுள்ள இம்மாடிக் கட்டடம் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் விமானக் குண்டுத் தாக்குதலில் அச்சுவேலிப் பிரதேசசபை-உபஅலுலகம் பாரிய சேதத்திற்கு உள்ளாகிய பின்னர் இன்றுவரை பல்வேறு தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (03)



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தொகுதி நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கட்டடத்திற்கான பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றுவதையும் காணலாம்.

(படங்கள்: பார்த்தீபன்)

# கற்றலுக்கான உபகரணங்களை மாணவர்களுக்கு சமாசம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடந்த ஆண்டுக்கான சமூக அபிவிருத்தி கல்வி விரிவாக்கல் திட்டத்தின்கீழ் 12 இலட்சம் ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கியுள்ளதாக சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாசத்தில் இணைந்துள்ள அங்கத்துவ சங்கங்களினது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும், பணியாளர்களின் பிள்ளைகளுக்குமே இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டுக்கான உதவிகளில் சுமார் 4 ஆயிரம் அங்கத்தவர்களதும் பணியாளர்களதும் பிள்ளைகள் பயன்பெற்றுள்ளனர்.

சமாசத்தினால் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் இன்றுவரை தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை 2011 ஆம் ஆண்டு முதல் மேலும் விரிவாக நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஆலோசனை பெறப்பட்டு சமூக அபிவிருத்தி நிதிக் குழுவொன்றை உருவாக்கவுள்ளோம்.

இந்நிதிக்குழு மூலம் தயாரிக்கப்பட்ட சமூகநலத் திட்ட நிதியத்தின் நடைமுறை விதி ஒன்றைத் தயாரித்து அதனைச் சமாச இயக்குநர் சபைக்குச் சமர்ப்பித்து அவர்கள் ஆராய்ந்த பின்னர் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் அங்கீகாரத்துடன் அதனை நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சீரற்ற நேர ஒழுங்கினால் பயணிகள் பெரும் சிரமம்

(கரணவாய்)

வவுனியாவிலிருந்து பருத்தித்துறை வரும் பேருந்துகள் புறப்படும் நேர ஒழுங்கில் சீரற்றதொரு நிலை காணப்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் வவுனியாவிலிருந்து பருத்தித்துறை நோக்கி வரும் பேருந்து வவுனியாவிலிருந்து 1.15 மணிக்குப் புறப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வந்து பருத்தித்துறைக்கு வரும் பயணிகள் 1.10 மணியளவில் வவுனியா பேருந்து நிலையத்தில் வந்து பார்த்தபொழுது பேருந்து அங்கு நிற்கவில்லை எனவும், பேருந்து நிலையத்தில் கேட்டதற்குப் பேருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டதாகக் கூறியதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் யாழ்ப்பாணம் சென்றே பருத்தித்துறைக்குச் செல்லவேண்டிய நிலை காணபபடுவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, பயணிகள் பிரயாணத்தைக் கருத்திற் கொண்டு பேருந்து புறப்படும் நேர ஒழுங்கை நடைமுறைப்படுத்திச் சேவையை வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர். (18)

# அனுமதி கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் விபரங்கள்

(சாவகச்சேரி)

'மகிந்த சிந்தனை' வேலைத் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்றநபர்களைக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவான 3000 ரூபாவை சமூக சேவைகள் அமைச்சின் அங்க வீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 8 குடும்பங்களுக்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

பெயர் குறிப்பிடப்படு வோரை உடன் தென்மராட்சிப் பிரதேச செலயக சமூக சேவைகள் பிரிவிற்குச் சமூகம் கொடுக் கும்படி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

ஆர்.கந்தசாமி (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), ரி.பவளநாயகி (உதயசூரியன் வீதி, சாவகச்சேரி), வி.சுந்தரலிங்கம் (மந்துவில் மேற்கு, கொடிகாமம்), செ.சபாநாயகம் (சரசாலை தெற்கு), திருமேனி புஸ்பராணி (கைதடி வடக்கு), ர.கந்தராசா (இலுவம் பிள்ளையார் கோவிலடி, மீசாலை), ஆ.கந்தசாமி (தம்பு தோட்டம், மீசாலை மேற்கு), த.சற்குணராசா (மடத்தடி கிழக்கு, சாவகச்சேரி).

இவர்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## ஆதினியின் இன்றைய பலன்

**(27.02.2011 – ஞாயிற்றுக்கிழமை)**

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 15

இராகுகாலம் 4.59– 6.29, சுபநேரம் 9.29 –10.59, தசமி மு.இ.9.21 மூலம் மாலை 6.52, அமிர்த சித்தம், கரிநாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– ஆரோக்கிய மிகுதி, விருந்துபசாரம், கீர்த்தி.

**ரிஷபம்:**– நண்பரால் உதவி, தனவரவு, நற்செய்தி.

**மிதுனம் :**– அயலவர் உதவி, கொண்டாட்டம், சுபச்செலவு.

**கடகம்:**– தொழிலால் லாபம், எதிரிகள் உறவு, பயண சுகம்.

**சிம்மம்:**– காரியத்தடை, அதிக செலவு, வாக்குவாதம்.

**கன்னி :**– மதிக்கப்படல், எதிர்ப்பாலார் உதவி, கற்பனை மிகுதி.

**துலாம் :**– காரியத்தடை, நண்பர் விரோதம், மனச் சஞ்சலம்.


**விருச்சிகம்:**– போட்டிகளில் வெற்றி, கொண்டாட்டம், விருந்துணவு.

**தனுசு:**– அலைச்சல், பொருள் இழப்பு,அரச பயம்.

**மகரம்:**– எதிலும் வெற்றி, பணவரவு, நற்செய்தி.

**கும்பம் :**– அதிகலாபம், நண்பர் உதவி, தாய்வழி நன்மை.

**மீனம்:**– ஆத்மீக விருப்பு, தானதர்மம் செய்தல், மனநிறைவு.



அண்மையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தியடிகளின் 63 ஆவது சிரார்த்ததின நிகழ்வில் இலங்கையின் சமூக அரசியல் சிந்தனையில் காந்தீய தத்துவத்தின் தாக்கம் என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்ற திருமதி பிரபாலினி தனத்திற்கு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா விருது வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்.நிருபர்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு அதிபர் சண் வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், கோண்டாவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நா.பிரேம்குமார், கோண்டாவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் ர.இரட்ணகோபால் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

☆ ☆ ☆

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி தஸ்நேவிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வீ.அருளானந்தமும், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராயரும் கலந்துகொள்ளவுள்ளனர். (21)

☆ ☆ ☆

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 1.45 மணிக்கு நெடியகாடு திருச் சிற்றம்பலப் பிள்ளையார் வீதியில் பாடசாலை அதிபர் சோ.ஜெய தேவா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இப்பாட சாலையின் முன்னாள் அதிபர் ஆ.முத்தையா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (109)

☆ ☆ ☆

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் முறைசாரக் கல்வி பயில்வதற்கு விண்ணப் பித்தவர்களில் இலவச பயிற்சிகளைப் பெறுபவர்கள் தங்களுக்கான அனுமதிக் கடிதங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

சி.திவ்யா, வி.அகலினி, க.மனோஜா, சி.யசோ (கணினிப் பயிற்சி. மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), யோ.விஜிதா (உடை அமைத்தல் பயிற்சி மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம். (11)

☆ ☆ ☆

(கிளிநொச்சி)

கிளி / அக்கராயன் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த.கண்ணபிரான் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு - சந்திரகுமார், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக அக்கராயன் பிரதேச 2 ஆம் கட்டளையதிகாரி டி.வி. பெரேரா, பொ.சுஜாத்குமார் (கணக்காய்வாளர் - கிளி) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் அறியத்தந்துள்ளனர். (69)

☆ ☆ ☆

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் வே.புவனேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர் சி.மயில்வாகனம் பிரதம விருந்தினராகவும், ஆழியவளை இராணுவ முகாம் கட்டளை அதிகாரி லெப்.கேணல் ஆழ்வீர, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (70,109)

# மாலைநேர மீன் சந்தைக்குத் தடை

(ஆனைக்கோட்டை)


ஆனைக்கோட்டைப் பகுதியில் மாலை வேளையில் தற்காலிகமாக இயங்கி வந்த மீன் சந்தை கடந்த புதன்கிழமை முதல் இயங்குவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மீன் சந்தை ஆனைக் கோட்டை பிரதான வீதியில் யாவிலுக்குச் செல்லும் வீதியில் இயங்கி வந்தது. இதனால் மாலை வேளைகளில் அவ்வீதியால் செல்லும் பொதுமக்கள் பயணம் செய்ய முடியாது பெரும் சிரமங்களை அனுபவித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக அப்பிரதேச மக்கள் மானிப்பாய் பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தியதாகவும், இதனால் மானிப்பாய் பிரதேச சபை இம்மீன் சந்தை இயங்கக்கூடாது என அறிவித்ததை அடுத்து தற்போது இம் மீன் சந்தை இயங்குவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## 'பொன் அணிகளின் போர்'

# வெற்றிதோல்வியின்றி நிறைவு



(யாழ்ப்பாணம்)

'பொன் அணிகளின் போர்' மாபெரும் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் 'பொன் அணிகளின் போர்' என வர்ணிக்கப்படும் இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியே நேற்று வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முன்னதாக ஒரு விக்கெட்டை இழந்து ஏழு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, ஜஸ்ரீன், குகபாலா ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றதுடன் 1953 ஆம் ஆண்டு ஏற்படுத்தியிருந்த மூன்றாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டச் சாதனையை முறியடித்தனர். இறுதியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்சிற்காக 78.5 ஓவர்களை எதிர்கொண்டு 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜஸ்ரீன் 137 பந்துகளை எதிர்கொண்டு 59 ஓட்டங்களையும், குகபாலா 105 பந்துகளை எதிர்கொண்டு 65 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இணைப்பாட்டமாக 116 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் லிவிங்டன் 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரியலக்ஷன், பெண்டில்கரன், கஜேந்திரன், பிரசோபனன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

45 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி, ஏழு விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. மதுசன் 15 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட அணித் தலைவர் எரிக் பிரதாப் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் 94ஆவது ஆண்டாக நடைபெற்ற 'பொன் அணிகளின் போர்' வெற்றிதோல்வின்றி நிறைவடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் சென் பற்றிக்ஸ் அணியின் தலைவர் எரிக் பிரதாப் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த கே. பிரசோபனனும், சிறந்த சகலதுறை மற்றும் சிறந்த களத்தடுப்பாளராக வீரராக ஜஸ்ரீனும் தெரிவானார்கள். (எஸ், 20)



படங்கள் : சுரேஷ்

# வீரர்களிடமிருந்து விலகியிருங்கள்

## ஊடகங்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை வேண்டுகோள்

(புதுடில்லி)

இந்திய வீரர்களிடம் இருந்து விலகியிருக்குமாறு ஊடகங்களுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்திய வீரர்கள் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் பேட்டி உள்ளிட்டவற்றுக்காக இந்திய வீரர்களை தொலைபேசி அல்லது எஸ்.எம்.எஸ். மூலம் தொடர்பு கொள்ள வேண்டாம் எனவும் இந்திய கிரிக்கெட் சபையின் செயலர் சீனிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பத்திரிகைகளில் தங்கள் கருத்துகளை வெளியிடுவது பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதால் உலகக் கிண்ணப் போட்டித் தொடரின்போது அதைத் தவிர்த்துவிடுங்கள் என்று வீரர்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை ஏற்கெனவே அறிவுரை கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெங்களூரில் வெள்ளிக்கிழமையன்று வலைப்பயிற்சியில் ஈடுபட்டபோது சேவாக்கின் இடது விலா எலும்பில் பந்துபட்டது. இதையடுத்து உடனடியாக இந்திய வீரர்கள் தங்கியிருந்த அறைக்கு சேவாக்கை அழைத்துச் சென்று சோதனை செய்தோம்.

அப்போது சிறிய அளவிலேயே காயம் ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அவர் இங்கிலாந்துக்கு எதிரான இன்றைய ஆட்டத்தில் களமிறங்குவார் எனவும் இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.


## 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுப்பவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

போட்டி இல.10

அனுப்ப வேண்டிய முகவரி:-

தினமுரசு விளையாட்டு அரங்கு, இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

ICC Cricket World Cup 2011

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) மார்ச்01 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை, கென்யா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறப்போகும் அணி எது?

2) இப்போட்டியின் ஆட்டநாயகன் யார்?

பெயர்: ......................................

முகவரி : ......................................

போ.இல : ......................................

விடைகள் : 01) ......................................

02) ......................................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

| தினமுரசு காரியாலயம் | தினமுரசு விளம்பரப் பணிமனை |
| --- | --- |
| 373, பிரதான வீதி, | M.P.C.S. பில்டிங் |
| யாழ்ப்பாணம். | 127, கே.கே.எஸ்.வீதி, யாழ். |

விடைகளை 01 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.


## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

# நிச்சயமானதுதான்...

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகிய பின் முதலாவது போட்டியின் பின் மிகவும் கனதியான ஆட்டமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இல 7 மேற்கிந்தியத்தீவு எதிர் தென்னாபிரிக்க பிரிவு பி ஆட்டம்தான். ஓரளவில் GREEN AND GOLD தான் சாதிப்பார்கள் என்பது தெரிந்திருந்தாலும் மேற்கிந்தியத் தீவுகள் கோபுரமாக நிமிர்ந்து தலைகுப்புற விழுவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

கிரிக்கெட் ரசிகர்கள் ஆட்டம் பற்றிய விபரங்களை நன்கறிந்திருப்பார்கள். அதற்கப்பால் TURNING POINT என்று ஒன்று இருக்கிறதல்லவா? தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு அல்லது மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வீழ்ச்சிக்கு இந்த திருப்புமுனை எதுவாக இருந்தது என்பது சுவையான கேள்விதான்.

முதல் ஓவரிலேயே கிறிஸ் கெய்ல் ஆட்டமிழந்தது தான் திருப்புமுனை என்கிறார்கள் சிலர். கிறிஸ் கெய்ல் அடித்தால் மொத்த எண்ணிக்கை முந்நூறைத் தாண்டும் என்பது உண்மைதான். ஆனால், அவர் எத்தனை ஆட்டங்களில்தான் பொறுப்பாக ஆடியிருக்கிறார்? எனவே, அவரை முதன்மைப்படுத்துவதில் பெரிய விடயம் ஒன்றும் இல்லை. ஆனால், சுதாகரித்துக் கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டாவது இலக்கை இழக்கும்போது 113 ஓட்டங்களில் இருந்தார்கள். இருந்தும் துரதிர்ஸ்டவசமாக சந்தர்போலுக்காக டுவைன் பிராவோ தன் விக்கெட்டை இழந்தது திருப்புமுனையாக இருந்திருக்கலாம். ஏனெனில் மிக ஆக்ரோஷமாக ஆடிக் கொண்டிருந்த டுவைன் பிராவோ, சந்தர்போலின் அனுபவம் திறமை மீது நம்பிக்கை வைத்தே தன்னைப் பலி கொடுத்தார். ஆனால், சந்தர்போலும் நீடிக்க இயலவில்லை.

இன்னொரு புறம் கென்ரோன் பொலாட் இறுதிப் பந்து ஓவர்களுக்குள் வந்து மின்னல் வேகத்தில் ரண் குவிப்பது ஒரு பாணி. ஆனால், அவரை ஒரு ஓட்டமும் எடுக்கவிடாமல் டேல் ஸ்ரெய்ன் திருப்பி அனுப்பியது திறமை.

எனவே, தலைதூக்க முயன்ற போதெல்லாம் மே.இந்திய அணிக்கு சம்மட்டி அடிபோட்டு விழுத்தியது தான தென் ஆபிரிக்காவின் வெற்றி என்று கூறலாம். ஒரு சம்பவத்தை மட்டும் சிறப்பாகக் கூறுவதென்பது கடினம்.

ஆனால், ஒன்றைக் கூறலாம். டுவைன் பிராவோ சந்தர்போல் அணி துரதிஸ்ர்டவசமாக பிரிக்கப்படாமல் இருந்திருந்தால் மொத்த ஓட்ட எண்ணிக்கை 300ஐ அண்மித்ததாக இருந்திருக்கும். ஆனால், மேற்கிந்தியத்தீவுகள் எத்தனை ஓட்டங்கள் குவித்திருந்தாலும் தெ.ஆபிரிக்கா அதனைத் தாண்டி இருக்கும். ஏனெனில் அத்தனை பலமான அணி அது. அதோடு, டேல் ஸ்ரெய்ன் மற்றும் மோர்னே மோர்க்கல் தரத்தில் வேகப்பந்து வீச்சாளர்களோ இம்ரான் தாஹிர் தரத்தில் கவுன்ரி அனுபவங்கள் கொண்ட (பாகிஸ்தானில் பிறந்து தெ. ஆபிரிக்காவைப் புகுந்த வீடாக்கிக் கொண்ட) சுழற்பந்து வீச்சாளர்களோ மேற்கிந்தியத்தீவுகளில் இல்லை.

இந்த நிலையில் என்னதான் கிரிக்கெட் நிட்சயமற்ற ஆட்டமென்று கூறினாலும் ஆட்டத்தின் முதல் பந்து வீசப்படுமுன்பே ரசிகர்கள் தெ. ஆபிரிக்காவின் வெற்றியை நிச்சயப்படுத்தி விட்டார்கள்.



**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011

ஜோசப் கிருஷ்ணா

## ரசிகர்கள் பாதிப்பு

(டாக்கா)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் மின்சார தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் ரசிகர்கள் போட்டியை தொலைக்காட்சியில் பார்க்க முடியாத நிலை உருவாகலாம். இதனைக் கருத்தில் கொண்டு டாக்காவில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தும், உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் போது பிற்பகல் 2 மணி முதல் இரவு 11 மணி வரை இயங்கக்கூடாது என்று அந்த நாட்டு மின்சார விநியோக நிறுவனம் உத்தர விட்டுள்ளது.

## இம்ரானின் அறிவுரை



(கராச்சி)

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பலம் வாய்ந்த அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் 4 சிறப்பு பந்துவீச்சாளர்களுடன் பாகிஸ்தான் களமிறங்க வேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் அறிவுரை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டிப்பாக 6 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்குவது அவசியம். அவர்களில் 4 பேர் சிறப்புப் பந்துவீச்சாளர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் இப்போது விக்கெட்டுகளை வீழ்த்தும் அணிகளே வெற்றிபெறுகின்றன. இது அணியின் வெற்றியை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும் என்றார்.

# நல்ல நாளாக அமைந்தது



(புதுடில்லி)

என் மீதான எதிர்பார்ப்பு அதிகம் இருந்ததால் பதற்றம் இருந்தது. இருப்பினும் அந்த நாள் நல்ல நாளாக அமைந்தது என தென்னாபிரிக்க அணியின் புதுமுக வீரர் இம்ரான் தாஹிர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

போட்டிக்கு முதல் நாள் அணி வீரர்களின் கூட்டத்தில், அடுத்த நாள் ஆட்டத்தில் நான் விளையாட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் பதற்றத்தில் அன்று இரவு முழுவதும் நான் தூங்கவில்லை. அடுத்த நாள் காலையிலும் தூங்க முடியவில்லை. இருப்பினும் நன்றாகச் செயற்பட நான் சக்தியுடன் இருப்பதாக நினைத்தேன். நல்ல நாளாக அமைய வேண்டும் என்று பிரார்த்தித்தேன். என் மீதான எதிர்பார்ப்பு அதிகம் இருந்ததால் பதற்றம் இருந்தது. என்றார்.

இவரின் அறிமுகப் போட்டியே உலகக் கிண்ணப் போட்டியாக அமைந்ததுடன் இப்போட்டியில் அணி நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை நிறைவு செய்திருப்பதாகவும் விளையாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

# எங்களை வெல்வது கடினம்



(நாக்பூர்)

நியூசிலாந்து அணிக்கெதிராக செயற்பட்டதுபோல் எமது பந்து வீச்சாளர்கள் செயற்படுவார்களேயானால் எந்தவொரு அணியாலும் எங்களை வெல்வது என்பது கடினமானது என அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான வெற்றி குறித்து ப்த்திரிகையாளர்களுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது எங்களுக்கு நல்ல ஆட்டமாக அமைந்தது. நியூசிலாந்து சிறந்த ஒரு நாள் போட்டி அணி. அந்த அணிக்கு எதிராக ஆட்டத்தில் ஜோன்சன், டெய்ட், பிரெட்லீ ஆகிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும் எப்படிப் பந்து வீசினார்களோ, அதே போன்று மற்ற ஆட்டங்களிலும் பந்து வீசினால், எந்த ஒரு அணிக்கும் எங்களை வெல்வது கடினமாக இருக்கும். பயிற்சிப் போட்டிகளில் அடைந்த தோல்விகளின் மூலம் நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டோம் என்றார்.




## நான்கு வார ஓய்வின் பின்பே...




(புதுடில்லி)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தின் போது கால் முட்டியில் காயமடைந்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சகலதுறை வீரர் வெய்ன் பிராவோ, காயத்தில் இருந்து குணமாக நான்கு வாரங்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் எஞ்சிய லீக் ஆட்டங்களில் விளையாட வாய்ப்பில்லை. இது, மேற்கிந்தியத்தீவு அணிக்கு மிகப்பெரிய பின்னடைவாகும். இந்த வாரத்தில் காயமடைந்த மூன்றாவது மேற்கிந்தியத்தீவு வீரர் பிராவோ ஆவார். ஏற்கனவே அட்ரியன் பரத், கார்ல்டோன் பாக் ஆகியோர் காயத்தால் தாயகம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ICC Cricket World Cup 2011

## இன்றைய ஆட்டம்

**இந்தியா எதிர் இங்கிலாந்து**

மைதானம் :பெங்களூர். பகலிரவு ஆட்டம்

## தினமுரசு இலங்கை எதிர் பாகிஸ்தான் SCORE CARD

மைதானம் : கொழும்பு திகதி : 26-02-2011

நாணயச் சுழற்சி வெற்றி பாகிஸ்தான் : முதலில் துடுப்பாட்டம்.

ICC Cricket World Cup 2011

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) அகமட் ஷவார்ட் | c சங்கக்கார b பெரேரா | 13 |
| 02) முகமட் ஹபீஸ் | run out (ஹேரத், மஹேல, சங்கக்கார, முரளி) | 32 |
| 03) கம்ரன் அக்மல் | st சங்கக்கார b ஹேரத் | 34 |
| 04) யூனிஸ்கான் | c மஹேல b ஹேரத் | 72 |
| 05) மிஸ்பா உல்-ஹக் | not out | 83 |
| 06) உமர் அக்மல் | c டில்சான் b முரளிதரன் | 10 |
| 07) சஹீர் அப்ரிடி | c டில்சான் b மத்தியூஸ் | 16 |
| 08) அப்துல் ரசாக் | c (su கப்புகெதர) b பெரேரா | 03 |
| 09) உமர் குல் | | |
| 10) அப்துர் ரஹ்மான் | | |
| 11) சொஹிப் அக்தர் | | |
| உதிரிகள் | (lb 4, w 5) | 09 |
| மொத்தம் | (7 W : 50 ஓவர்கள்) | 277 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தரங்க | c அப்ரிடி b ஹபீஸ் | 33 |
| 02) டில்சான் | b அப்ரிடி | 41 |
| 03) சங்கக்கார | c ஷவார்ட் b அப்ரிடி | 49 |
| 04) மஹேல ஜெயவர்த்தன | b அக்தர் | 02 |
| 05) சமரவீர | st கம்ரன் அக்மல் b அப்ரிடி | 01 |
| 06) சமர சில்வா | st கம்ரன் அக்மல் ரஹ்மான் | 57 |
| 07) மத்தியூஸ் | c ஷவார்ட் b அப்ரிடி | 18 |
| 08) பெரேரா | b அக்தர் | 08 |
| 09) குலசேகர | c உமர் அக்மல் b உமர் குல் | 24 |
| 10) ரங்கண ஹேரத் | not out | 04 |
| 11) முரளிதரன் | not out | 00 |
| உதிரிகள் | (b 1, lb 10, w 16, nb 2) | 29 |
| மொத்தம் | (9 W; 50 ஓவர்கள்) | 266 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| குலசேகர | 10 | 64 | 00 |
| ரீ.சி. பெரேரா | 09 | 62 | 02 |
| மத்தியூஸ் | 10 | 56 | 01 |
| முரளிதரன் | 10 | 35 | 01 |
| றங்கண ஹேரத் | 10 | 46 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சொஹிப் அக்தர் | 10 | 42 | 02 |
| உமர் குல் | 09 | 60 | 01 |
| முகமட் ஹபீஸ் | 06 | 33 | 01 |
| சஹீர் அப்ரிடி | 10 | 34 | 04 |
| அப்துர் ரஹ்மான் | 10 | 63 | 01 |


**11 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி. ஆட்டநாயகன் : அப்ரிடி**

## பாகிஸ்தான் வெற்றி

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 'ஏ' பிரிவு ஆட்டத்தின் லீக் போட்டியில் பாகிஸ்தான், இலங்கை அணிகள் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் மோதின. முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. போட்டியின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார்.





அனுசரணையாளர்:




L கிருபா லேணர்ஸ் L

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

யாழ். நகரில் முன்னணிப் பயிற்றுவிப்பாளர்கள்

- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ரயல் பரீட்சையில் சித்தியடைய சகல வாகனங்களிலும் விசேட பயிற்சி வழங்கப்படும்.
- தாம் விரும்பும் நேரங்களில் (அரச, தனியார் ஊழியர்களுக்கு) வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக்கட்டணம்.

226, கஸ்தூரியார் வீதி, யாழ். T.P: 0212224353, 0777225292

மகாத்மா வீதி, நெல்லியடி. T.P: 0213006550

ஐயனார் வீதி (கச்சேரி அருகாமை) கிளிநொச்சி. T.P: 0212285505, 0777238600.

(C/485)

# கறுப்புப் பணம் இந்திய வளர்ச்சிக்குப் பயன்பட பாரதிய ஜனதா ஆட்சிக்கு வரவேண்டும்

## நிதின் கட்காரி தெரிவிப்பு




(சென்னை)

சுவிஸ் வங்கி உட்பட பல வெளிநாட்டு வங்கிகளில் 22 லட்சம் கோடிக்கு மேல் கறுப்பு பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பா.ஜ. கட்சி ஆட்சிக்கு வந்தால் வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கணக்கில் வராத கறுப்பு பணத் தைப் பறி முதல் செய்து, இந்தியாவின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவோம் என பாரதிய ஜனதாக் கட்சியின் தேசியத் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்தார்.

புதுச்சேரியில் நடைபெற்ற கட்சியின் தாமரை ரத யாத்திரை நிகறைவு விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

பா.ஜ., சிறுபான்மைக்கு எதிரான கட்சி என்று சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். பா.ஜ. சிறுபான்மைக்கு எதிரானது என்றால் எப்படி அப்துல் கலாமை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழிந்திருக்கும். பா.ஜ. கட்சி பயங்கரவாதிகளுக்கும், தேச விரோதிகளுக்கும் எதிரானதே தவிர, சிறுபான்மைக்கு எதிரானது அல்ல.

பா.ஜ.வின் தலைவராக, சாதாரண தொண்டராக இருநத எனக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், காங்கிரஸ் கட்சித் தலைவராக நேரு, இந்திராகாந்தி, ராஜிவ் காந்தி, சோனியா என அனைவரும் நேரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் தலைவராக வர முடியும். மன்மோகன் சிங், சிதம்பரம், பிரணாப் முகர்ஜி போன்றவர்கள் தலைவராக வரமுடியுமா? என்றார்.



## ஞாயிறு நற்சிந்தனை

மனிதனுக்கு உயிர் அவசியம். மனிதன் மனிதனாக வாழ, மன்னிப்பு அவசியம். மன்னிப்புக் கொடுத்தும், பெற்றும் வாழாத மனிதன் மனிதனல்ல. மனித வாழ்வுக்கு அவசியமான மன்னிப்புக் கொடுக்கின்ற மனம் மனிதனுக்கு மட்டுமே குறைவின்றித் தடையின்றி வேண்டிய போதெல்லாம் கிடைக்கும். பேதுரு விரும்புவது போல ஏழு முறையும், இயேசு சொல்லியபடி ஏழு எழுபது முறையும் மன்னிப்புக் கிடைக்கும்.

உண்மையிலே தன் தவறுக்கு மனம் வருந்தி, மன்னிப்புக் கேட்டு, இனிமேல் இத்தவறைச் செய்வதில்லை எனத் தீர்மானம் செய்து, தவறால் வந்த இழப்பை ஈடுசெய்து, பாதிக்கப்பட்டவரோடு உறவை வளர்க்கும் பண்புகள் இருந்தால் மட்டுமே மன்னிப்பைப் பெற முடியும்.

மன்னிப்போடு தொடர்புடைய இன்னொரு பண்பு இரக்கம். இரக்கம் காட்டவும், பெறவும் தகுதியில்லாத மனிதன் மன்னிப்புப் பெறும் உரிமையும், தகுதியும் இல்லாதவன்.

மன்னிப்பும் இரக்கமும் தொடர் நிகழ்ச்சிகள். மனிதன் உள்ளவரை தொடர்ந்துகொண்டே இருக்கும். இறுதியில் இறைவனின் மன்னிப்பிலும் இரக்கத்திலும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் நிறைவும் முழுமை பெறுவதே வாழ்வின் அமைப்பு. இதைப் புரிந்துகொண்டு செயற்பட முன்வருமோம்....

யா.அலெக்சாண்டர்
மறையாசிரியர்.

# தொகுதிப் பங்கீடு பேச்சில் எவ்வித இழுபறியும் இல்லை


(சென்னை)

தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தையில் தி.மு.க., - காங்கிரஸ் இடையே எவ்வித முட்டுக்கட்டையோ, இழுபறியோ ஏற்படவில்லை. கூட்டணி ஆட்சி என்பதெல்லாம் கற்பனை, என, முதல்வர் கருணாநிதி கூறினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்றிரவு, முதல்வர் கருணாநிதி பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறுகையில்-

தொகுதிப் பங்கீடு தொடர்பாக தி.மு.க., - காங்கிரஸ் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இன்று முடிந்துள்ளது.



மூன்றாம்கட்டப் பேச்சு வார்த்தைக்கு முன்னேறியுள்ளோம். அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை இரண்டு நாட்களில் தொடரும்.

இந்தப் பேச்சுவார்த்தையில் இருதரப்பினருக்கும் இடையே எவ்வித முட்டுக்கட்டையோ, இழுபறியோ ஏற்படவில்லை. கூட்டணி ஆட்சி என்பதெல்லாம் கற்பனை என அவர் மேலும் தெரிவித்தார்.

# கர்ப்பிணிப் பெண்களுக்கு நீரிழிவு தடுப்பதற்கு புதிய திட்டம் அமுல்

கர்ப்பிணிப் பெண்களுக்கும், வயிற்றில் உள்ள குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் வராமல் தடுக்கும் புதிய திட்டம் வெளி நாட்டு நிறுவன உதவியுடன் தமிழகத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக சென்னை டாக்டர் சேஷையா நீரிழிவு ஆய்வு மருத்துவ நிறுவனத்தின் தலைவர் டாக்டர் வி.சேஷையா, டாக்டர் பாலாஜி, நீரிழிவு நலமையத் தலைவர் டாக்டர் வி.பாலாஜி ஆகியோர் கூறியதாவது -

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் இந்தியாவிலுள்ள பெண்களைத்தான் நீரிழிவு நோய் அதிகமாகத் தாக்குகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு நீரிழிவுநோய் வரும் ஆபத்து மிக மிக அதிகம். கருவுற்ற பெண்களின் உடல் எடை அதிகரிப்பதாலும், போதுமான உடற்பயிற்சி இன்மை போன்ற காரணங்களினால் அவர்களுக்கு நீரிழிவு நோய் வருகிறது.

நீரிழிவு நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். நீரிழிவுநோய், பெற்றோரிடமிருந்து குழந்தைக்குச் செல்லும் வாய்ப்பு இருநதாலும் தந்தையை விட தாய் வழியாகச் செல்லவே அதிக வாய்ப்பு இருக்கிறது. எனவே, கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்

மக்களிடையே மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்களினால் நீரிழிவு நோய் உட்பட பல நோய்கள் அதிக ரித்து வருகின்றன. எனவே, கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்வதன் மூலம் நீரிழிவு நோய் வராமல் தடுக்க முடியும் என்பதை உள்ளூர் டாக்டர்கள் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கும், அவர்களின் வயிற்றில் உள்ள குழந்தைக்கும் நீரிழிவு நோய் வராமல் தடுக்கும் வகையில் நோவோ நார்ஸ்டிக் என்ற டென மார்க் நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் இணைந்து புதிய திட்டத்தை தமிழகத்தில் செயற்படுத்த உள்ளோம். இந்தத் திட்டத்தின்கீழ், கர்ப்பிணிப் பெண களைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய பரிசோதனைகள் செய்யப்படும். அவர்களுக்கு நீரிழிவு நோய்ப பாதிப்பு இருந்தால் அதைப் போக்குவதற்கும், வயிற்றில் உள்ள குழந்தைக்கும் பாதிக் கும் அபாயம் இருந்தால், அதைத் தடுக்கவும் சிகிச்சை அளிக்கப்படும்.








## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்



பெயர்: ஜெ.புவியரசன்
முகவரி: சின்னாலடி, காரைநகர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................
முகவரி : ....................................
பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

.................................... பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# தமிழக மீனவர் மீதான தாக்குதலை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக்கூடாது

(சாமியார்மடம்)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை அரசு துப்பாக்கிச் சூடு நடத்துவதை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக்கூடாது என்று மனிதநேய மக்கள் கட்சி மாநிலத் தலைவர் ஜவஹருல்லா கூறினார்.

மனித நேய மக்கள் கட்சி சார்பில் திங்கள் சந்தையில் பொதுக்கூட்டம் நேற்று முன் தினம் நடந்தது. இதில் கலந்து கொள்ள வந்த மனித நேய மக்கள் கட்சி மாநிலத் தலைவர் ஜவஹருல்லா நிருபர்களிடம் தெரிவித்ததாவது -

சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 15 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட மனிதநேய மக்கள் கட்சிக்கு அ.தி.மு.க கூட்டணியில் 3 இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசியல் ஒரு தொழில் அல்ல, சேவை என்பதை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில், மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள்.

அ.தி.மு.கவுடன் மனிதநேய மக்கள் கட்சி கைகோர்த்து புதிய அரசு அமைய உறுதுணையாகச் செயற்படும். தற்போது அ.தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க இணைவது கூட்டணிக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை அரசு துப்பாக்கிச் சூடு நடத்துவதை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக் கூடாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிற்குள் ஊடுருவமுயன்ற இருபது பாகிஸ்தானியர்கள் கைது

இந்தியாவில் மீண்டும் ஒரு தடவை பெரிய தாக்குதல் நடத்தப் போவதாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த சில மாதங்களாக மிரட்டல் விடுத்தபடி உள்ளனர்.

இதையடுத்து, கடலோரக் காவற்படையினர் தினமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குஜராத் மாநில கடல் பகுதியில் சுமார் 36 நாட்டிக்கல் மைல் தொலைவில் நேற்றுக் கடலோரக் காவற்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அப்போது 3 மர்ம மீன்பிடிப் படகுகள் அந்தப் பகுதியில் கரைநோக்கி வந்து கொண்டிருந்தன.

அல்ரகுமான், அல்கவுசர், அல்பனர் என்று பெயரிடப்பட்டிருந்த அந்த 3 படகுகள் மீது அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அந்தப் படகுகளை மடக்கி ஆய்வு செய்தனர். அந்தப் படகுகளில் மீன்கள் எதுவும் இல்லை. மர்ம மனிதர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. விசார ணையில் 3 படகுகளில் இருந்த 20 பேரும் பாகிஸ்தானைச் சேர்ந்த வர்கள் என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்களை உளவுப் பிரிவினரிடம் கடலோரக் காவற்படையினர் ஒப்படைத்தனர்.

# தொழில்துறைக்கான சிறப்புவலயத்தை சம்பூரில் அமைப்பதற்கு அரசாங்கம் முடிவு

## இந்திய அணுமின் நிலையத்திற்கு மறுப்பா?

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூரில் கனரகத் தொழில்துறைக்கான சிறப்பு வலயம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த புதன்கிழமை இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

மிச்செல் கொன்சோடியம் என்ற அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்ட பல்தேசிய நிறுவனத்தின் வேண்டுகோளை ஏற்றே அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

பிறேசில் மற்றும் இலங்கையிலுள்ள தமது பங்காளர்களுடன் இணைந்து இந்த பல்தேசிய நிறுவனம் சம்பூரில் கற்கரி, இரும்பு சார்ந்த கனரகத் தொழில்துறையையும், இயந்திர மற்றும் சீனி சுத்திகரிப்பு தொழிற்சாலைகளையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இங்கு கனரகத் தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பான சாத்திய ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மிச்சேல் கொன்சோடியம் நிறுவனத்துக்கு இலங்கை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித் திருந்தார்.

இங்கு முதற்கட்டமாக 700 மில்லியன் டொலர் முதலீடு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக சம்பூரில் 97 சதுர கீ.மீற்றர் பிரதேசத்தை உள்ளடக்கியதாக சிறப்பு கனரக தொழில்துறை வலயம் உருவாக்கப்படும்.

ஆழமான துறைமுக வசதிகளைக் கொண்டிருப்பதால் இங்கு முதலீடு செய்வதில் அவுஸ்ரேலிய நிறுவனம் ஆர்வம் காட்டி வருகிறது.

திருகோணமலைக் குடாவின் நுழைவாயில் பகுதியில் அமைந்த நிலமே இந்த கனரகத் தொழில்துறை வலயமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இது ஏற்கனவே இந்திய நிறுவனம் ஒன்றுக்கு அனல் மின் நிலையத்தை அமைப்பதற்காக வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியாகும்.

இந்தத் திட்டத்தின் போது சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.


இலங்கை அரசாங்கம் சம்பூரில் இந்திய உதவியுடன் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்காக அந்தப் பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்துள்ளது.

இதன்காரணமாக அங்கிருந்து பெருமளவு தமிழர்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு இலங்கை அரசு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் இந்தப் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழர்களின் அடிப்படை வாழ்வாதாரங்கள் முற்றாகப் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு இந்திய நிறுவனத்துக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கிய போதும் அது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்வதை இழுத்தடித்து வருகிறது.

இலங்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டு ஆவணம் ஒரு வருடத்துக்கும் மேலாக ஆராயப்பட்டு வருகிறது. அத்துடன் அவர் இந்தியாவிடம் இதுதொடர்பாக 93 கேள்விகளுக்கு விளக்கமளிக்குமாறும் கோரியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



புதியகடற்படைத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட வைஸ் அட்மிரல் திஸநாயக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து நினைவுப் பரிசை வழங்குவதனைக் காணலாம்.

# விமானப்படை சாகசம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் 60 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மார்ச் 2ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை இரத்மலானை விமானத் தளத்தில் விமானப்படையினரது கண்காட்சி நிகழ்வுகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விமானப்படையினரது சாகசங்களும் மற்றும் சர்வதேச குழுக்களின் சாகசங்களும் இடம்பெறவுள்ளன. விமானம் மற்றும் தரைமூலமான தாக்குதல் முறைகளும் இதன்போது காட்சிப்படுத்தப்படவுள்ளன.

# நாய்களைச் சுட்டு,அடித்துக்கொல்வது தண்டனைக்குரிய குற்றமென அறிவிப்பு

(கொழும்பு)

மான், மரை, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, யானைகள், சிறுத்தை,கரடி,மயில் போன்றவை நாட்டின் தேசிய வளங்களாக இருப்பதனால், அவற்றை இறைச்சிக்காக அல்லது வேறு ஏதாவது இலா பமடையும் நோக்கத்திற்காக சுட்டுக் கொல்வது இலங்கைச் சட்டத்தின்படி ஒரு தண்டனைக் குரிய குற்றமாகும்.

அது போன்றே மனிதனின் நெருங்கிய நண்பனான நாயும் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ள ஒரு மிருகமாகும். நாய்களைத் துப்பாக்கியால் சுட்டு அல்லது அடித்துக் கொல்வது தண்டனைக்குரிய குற்றமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஆகவே, நாய்களைக் கொல்லுதல் அல்லது அடித்து ஊனமாக்குதல் தண்டனைக் குரிய குற்றமாகும் எனவும் அதில் சம்பந்தப்பட்டவர்களைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாய்கள் ஈவிரக்கமற்ற முறையில் சுட்டும் அடித்தும் நச்சு ஊசிகளைக் குத்தியும் கொல்வது உடனடியாக தடுக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனால் அவற்றை அழிப்பது அவசியம் என்ற சில உள்ளூராட்சி மன்றங்களுக்கு இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடலாகாது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையை நாடெங்கிலும் குறைக்க வேண்டுமானால் அவற்றைப் பிடித்து நோய்த் தடுப்பு ஊசிகளை குத்தியும் கருத்தடை சத்திரசிகிச்சைகளைச் செய்தும் சுதந்திரமாக இருப்பதற்கு இடமளிக்க வேண்டுமென்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

இத்தகைய நோய்த்தடுப்பு, கருத்தடை, சத்திரசிகிச்சைகளை செய்வதற்காக அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் வைத்திய பிரிவுகளுக்கு வருடாந்தம் பல இலட்சம் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது. விசர் நாய்களை மாத்திரமே உள்ளூராட்சி மன்றங்கள் பொது மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அழித்துவிடலாம் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# தொற்றாத நோய்கள் காரணமாக மரணிப்பவர்களின் தொகை அதிகம்

## சனத்தொகையிலும் வீழ்ச்சியெனக் கவலை

(கொழும்பு)

தொற்றாத நோய்கள் விடயத்திற்குப் பொறுப்பான மேலதிகச்செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கையிலே தொற்றாத நோய்கள் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளமை காரணமாகவே அரசாங்கம் இந்த முடிவிற்கு வந்துள்ளது.

ஒரு நாளில் இலங்கையில் மரணிப் பவர்களில் 50 வீதத்தினர் தொற்றாத நோய்கள் காரணமாக மரணிப்பதாக ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இலங்கையில் ஒரு நாளில் சுமார் 1000 பேர் மரணிப்பதாகவும், அதில் 500 பேர் தொற்றாத நோய்கள் காரணமாக மரணிப்பதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகிறார். இலங்கையிலே ஒரு நாளில் 1200 குழந்தைகள் பிறப்பதாகவும் அதை அண்மித்த தொகையினர் தினமும் மரணிப்பதனால் நாட்டிலே சனத்தொகை விருத்தியானது மந்தமான வேகத்திலேயே இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானவர்கள் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,18-65 வயதிற்கு இடைப்பட்டவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரதரவுகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார். கடந்த ஆண்டிலே சுமார் 900 கோடி ரூபா சிகரெட் மற்றும் பீடி என்பவற்றிற்கு செலவிட்டுள்ளதாகக் கூறிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன,புகைபிடித்தல்,மது பானப் பாவனை, சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் உணவு, உடனடி உணவு வகைகள் மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடாமை என்பன தொற்றாத நோய்களுக்குக் காரணமாக அமைந்துள்ளதாகவும் கூறினார்.

இந்தக் காரணங்களினால் புதிதாக நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் ஊடாக தொற்றாத நோய்கள் தொடர்பாகவும், அவற்றினைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் நாடளாவிய ரீதியில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# கடந்த வருடம் 171 இலங்கையர் ஜப்பானில் அரசியல்தஞ்சம்

(கொழும்பு)

ஜப்பான் நாட்டில் கடந்த வருடம் 171 இலங்கையர்கள் அரசியல் தஞ்சம் கோரி உள்ளனர்.

யப்பானிய குடிவரவு திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளில் இருந்தும் ஒட்டுமொத்தமாக 1202 பேர் விண்ணப்பித்து இருக்கின்றனர்.

அதற்கு முந்திய வருடத்தை விட இத்தொகை 186 பேரால் குறைந்து உள்ளது. மியன்மாரில் இருந்து 342 பேர்,துருக்கியில் இருந்து 126 பேர்,நேபாளத்தில் இருந்து 109 பேர் மற்றும் இந்தியாவில் இருந்து 91 பேர் விண்ணப்பித்து இருக்கின்றனர்.

ஆனால் மொத்தமாக 39 பேருக்கு மாத்திரம் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டு உள்ளது. அதற்கு முந்திய வருடத்தை விட இத்தொகை 09 பேரால் அதிகரித்துள்ளது.

# லசந்தவின் படுகொலை தொடர்பான 2ஆவது விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)



சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான இரண்டாவது இரகசிய விசாரணை அறிக்கையை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

கல்கிஸ்ஸ நீதவான் நிரோசா பெர்னாண்டோவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அத்திட்டிய பிரதேசத்தில் வைத்து இனந் தெரியாத நபர்களினால் தாக்குதலுக்கு இலக்காகி லசந்த விக்ரமதுங்க உயிரிழந்தார்.

குற்றச் செயலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இராணுவப் புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தர் ஒருவரும், நுவரெலிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், இந்தக் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஐ.நா.செயலருடனான சந்திப்பு

# குழப்பமான தகவல்கள் வெளியீடு; சந்தேகிக்கும் இன்னர் சிற்றிபிறஸ்

(கொழும்பு)

இலங்கை அரசின் பிரதிநிதிகள் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனைச் சந்தித்தது தொடர்பாக குழப்பமான தகவல்களையே இருதரப்பும் தருவது குறித்து இன்னர் சிற்றி பிறஸ் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக இன்னர் சிற்றி பிரஸ் மேலும் கூறியிருப்பதாவது-

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைத்திருக்கும் வல்லுநர்கள் குழு, இலங்கைக்குச் சென்று அதிபர் மகிந்த ராஜபக்ஷவை அல்லது சட்டமா அதிபரைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு கொழும்பு அனுமதிக்குமா என்பது தொடர்பாக பல மாதகாலமாக சர்ச்சை நிலவி வந்தது.

இந்த நிலையில் இலங்கையின் சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் மற்றும் ஐ.நாவுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் இராணுவ ஜெனரலுமான சவீந்திர சில்வா ஆகியோர் பெப்ரவரி 23ஆம் நாளன்று பான் கீ மூனைச் சந்தித்திருக்கிறார்கள்.

போர்க்குற்றம் சுமத்தப்பட்ட மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் நடந்த சந்திப்புத் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெவ்ஸ்கியிடம் "இன்னர் சிற்றி பிறஸ்" கேட்டது.

அதற்கு, இலங்கையில் இடம் பெறுகின்ற "இனநல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பான அதிகாரபூர்வச் சந்திப்பே இது" என்று மாத்திரம் அவர் பதிலளித்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்துடனான பரஸ்பர கருத்தொருமைப்பாட்டுடன் அமைந்த கருத்துக்களா இவை என இன்னர் சிற்றி பிறஸ், அவரிடம் கேட்டதற்கு, ஐ.நா செயலகத்தின் சார்பாக மாத்திரமே தான் இந்தக் கருத்துக்களைக் கூறுவதாகப் பதிலளித்தார்.

அதிபர் ராஜபக்ஷ "நெகிழ்வுப் போக்கினைக்" கடைப்பிடிப்பதால் தான் அமைத்திருக்கும் வல்லுநர்கள் குழு இலங்கைக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக டிசம்பர் 17ஆம் நாள் பான் கீ மூன் கூறியிருந்த போதும் ஏன் இதுவரை அவர்கள் அங்கு செல்லவில்லை என இன்னர் சிற்றி பிறஸ் பான் கீ மூனிடம் கேட்டிருந்தது.



அதற்கு இலங்கைக்கு வல்லுநர் குழுவினால் போக முடியும் என்றும் அதற்கான "முயற்சிகளில்" அவர்கள் குழு ஈடுபட்டிருப்பதாகவும் குழப்பகரமான பதிலை அவர் வழங்கினார்.

ஆனால் இலங்கையின் சட்டமா அதிபருடனான சந்திப்புத் தொடர்பாக பான் கீ மூனின் அலுவலகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், வல்லுநர்கள் குழுவின் கொழும்புக்கான பயணம் தொடர்பாக எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

இதுபோன்றதொரு சந்திப்பு இடம் பெறவுள்ளது என்று இன்னர் சிற்றி பிறஸ் வெளியிட்ட செய்தியை முதலில் மறுத்திருந்த இலங்கை அரசாங்கம்,

பின்னர் பான் கீ மூனுக்கும் சட்டமா அதிபருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றிருந்ததை இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் றொமேஸ் ஜெயசிங்க கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் பத்திரிகைக்கு உறுதிப்படுத்தியிருந்தார்.

"சட்டம் சார் விடயங்களே" கலந்துரையாடப்பட்டதாக அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இந்தச் சந்திப்புத் தொடர்பான ஐ.நாவின் அறிக்கையில் வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தநிலையில், வல்லுநர் குழு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக கடந்த பெப்ரவரியில் நீடிக்கப்பட்ட காலக்கெடுவும் முடியப் போகிறதே என்று இன்னர் சிற்றி பிறஸ் பான் கீ மூனின் பேச்சாளர் நெவ்ஸ்கியிடம் கேட்ட போது, இறுதி அறிக்கை தொடர்பாக "வல்லுநர்கள் குழு எங்களிடம் அறியத் தரும்போது நாங்கள் உங்களுக்கு அறிவிப்போம்'' என்று பதிலளித்தார். அறிக்கையை அவர்கள் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு என்ன என்று இன்னர் சிற்றி பிறஸ் அவரிடம் கேட்டபோது, அதற்குப் பதில் வழங்க பான் கீ மூனின் பேச்சாளர் மறுத்துவிட்டார்.

அதிகளவு பிரதிகள் விற்பனையாகும் நியூயோர்க் பிறஸ் பத்திரிகை கூட ஒரு போர்க்குற்றவாளி என விபரித்த இலங்கையின் முன்னாள் ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கும் பான் கீ மூனுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு இதுதானா என்று நெவ்ஸ்கியிடம் கேட்டபோது, அது தொடர்பாகத் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார்.

பான் கீ மூன் அடிக்கடி பேசும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புச் சொல்லும் முறைமை தொடர்பான ஐ.நாவின் வெளிப்படைத் தன்மை இதுதானா? என்று இன்னர் சிற்றி பிறஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

## நன்னடத்தை விதிகளுக்கு அமைவாகவே சிறுவர் இல்லங்கள் இயங்க வேண்டும்

(வவுனியா)

வவுனியா,மன்னார் மாவட்டங்களில் உள்ள சிறுவர் இல்லங்கள் சிறுவர் நன்னடத்தை திணைக்கள விதிமுறைகளுக்கு அமைவாக இருந்தால் மட்டுமே சிறுவர் இல்லங்களாகப் பதிவு செய்யமுடியும் என வடமாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறுவர்களுக்கு முக்கியமான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இல்லங்களில் உள்ள வசதிக்கு அமையவே சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் சுகாதார வசதிகள்,சிறுவர்களுக்குரிய கல்வி, விளையாட்டு மற்றும் பொழுது போக்கு அம்சங்களும் அடங்கியிருக்க வேண்டும் எனவும் நன்னடத்தைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கணித பாடத்தில் சித்திபெற மேலும் இரண்டு சந்தர்ப்பம்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணிதபாடத்தில் சித்தியடையத் தவறும் மாணவர்களுக்கு மேலும் இரண்டு சந்தர்ப்பங்களை வழங்கி,அப்பாடத்தில் சித்தி பெறவைப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கணித பாடத்தில் சித்தியடையாமல் உயர்தர கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் கணிதபாடத்தில் சித்தியடைவதற்கு இது நாள்வரை ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்பட்டது.

ஆனால் மாணவர்கள் நன்மை பெறும்வகையில் எதிர்காலத்தில் இது இரண்டு சந்தர்ப்பமாக அமையும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்பாவனை

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அல்வாய் கி[illegible]குப் பகுதிகளில் இரவு வேளைகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுபவர்களின் தொகை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதிகளுக்கு மேலாக மின் வயர்கள் இழுத்துச் சென்று களவாக மின்சாரத்தைப் பெறுவதாக அவ் வீதியால் நடமாடும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து கவனம் இனியாவது எடுப்பார்களா என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (100)



யுத்த காலத்தில் சிவில் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிகளை ஏந்திப் போராடினார்கள். அவரவர் கிராமங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தனர். ஆனால் இன்றைய யுத்தம் அற்ற சூழலில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் மகா ஓயா பிரதேசத்தில் நெல் அறுடையில் சிவில் பாதுகாப்புப் படையினரில் ஒரு சாரார் ஈடுபட்டு இருக்கின்றமையைக் காணலாம்.

## சட்டவிரோதமான மின் பாவனை தண்டம் 1 பில்லியன் வருமானம் பெற்றமின்சாரசபை

(கொழும்பு)

சட்டவிரோதமின்பாவனை,மின் விநியோகமோசடி உட்பட பல்வேறு குற்றச்சாட்டு காரணமாக விதிக்கப்பட்ட தண்டத்திலிருந்து ஒரு பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற முடிந்ததென இலங்கை மின்சாரசபையின் வேலையகப் பணிப்பாளர் றொஷான் குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்களெனத் தெரிவித்து சுமார் ஆறாயிரம் பேர் கடந்த வருடம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சாரசபை விநியோகித்த 121 பில்லியன் ரூபா பெறுமதியான மின்விநியோகத்தில் 118.16 பில்லியன் ரூபாவைப் பெற்றுள்ளது. கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான 9 வருட காலத்தில் 116 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் இந்த வருடத்தில் வீண் விரயமாகும் மின்சாரம் 14.59 வீதத்திலிருந்து 13.32வீதமாக குறைவடைந்துள்ளது. மின்சார சபையின் விரயமாகும் வீதம் இதுநாள்வரை 0.5 வீதமாக இருந்தது. ஆனால் இந்த வீண் விரயம் 1.19 வீதத்தினால் மேலும் இந்த வருடம் குறைவடைந்துள்ளது.

இவ்வாறு மின் விநியோகம் வீண்விரயமாவது குறைவடைவதற்கு, அமைச்சர் சம்பிக் கரணவக்கவின் கண்டிப்பான பணிப்புரைகளும், சட்டவிரோத மின்விநியோக செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டமையுமே காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலைகளின் வளர்ச்சி சமூகங்களின் பங்களிப்பில் தங்கியுள்ளது

## ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் வளர்ச்சி என்று தனியே அரச உதவி களில் மட்டும் தங்கியிருக்கும் விடயமல்ல. மாறாக பாடசாலை சமூகங்களின் உயர்ந்த பங்களிப் பிலும் தங்கியுள்ளது என ஈ.பி. டி.பி. நாடாளுமன்ற உறுப்பின ரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் (அசோக்) தெரி வித்துள்ளார்.

நேற்று மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கல வன் பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந் தினராக கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில், பாடசாலைகளின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் பாடசாலைகளைச் சேர்ந்த பெற் றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கிராம மக்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள் போன்றோரின் உயர்ந்த பங்களிப்பு இருக்க வேண்டும். அதற்கு பின்புதான் அரசின் உத விகள் எனத் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கான வள ஒதுக்கீடுகள் சரியான முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண் டும். இல்லையெனில் பாடசாலை களின் அபிவிருத்தி பாதிக்கப் படும். கடந்த காலங்களில் பாட சாலைகளுக்கு மேற்கொள்ளப் பட்ட வள ஒதுக்கீடுகள் பார பட்சமான முறையில் இடம்பெற் றதன் விளைவுதான் இன்று கல் வியில் பிரதேசங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவ தற்கு காரணம். இதற்கு அரச திணைக்களங்களைச் சேர்ந்த சில அதிகாரிகளும் காரணம். ஏனெனில் அவர்கள் வள ஒதுக் கீடுகளின் போது தங்களுடைய சமூகம் தங்களுடைய பிரதேசம் போன்ற வட்டத்திற்குள் நின்று செயற்பட்டதன் தாக்கம்தான் இன்றைய ஏற்றத் தாழ்வாகும்.

எனவே கடந்த காலங்களில் நிகழ்ந்த தவறுகளை இனிமேல் அனுமதிக்கப் போவதில்லை. நியாயமான வள ஒதுக்கீடுகள் மூலம் சமநிலையான கல்விச் செயற்பாட்டினை மேற்கொள்ள எமது கட்சியான ஈ.பி.டி.பியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றர். இனிவரும் காலங்களில் அபிவிருத்திக்கு என கிடைக்கின்ற நிதிகளை கிராமமட்ட மக்கள் அமைப்புக் களின் ஊடாக நியாயமான முறையில் ஒதுக்கீடுகளை மேற் கொண்டு சமநிலையான அபி விருத்திச் செயற்பாட்டினை முன் னெடுப்போம் என்றும் தெரிவித் தார்.

பாடசாலை அதிபரின் கோரிக் கைகளை கவனத்தில் எடுப்பதா கவும், வேறொரு சந்தர்ப்பத்தில் குறித்த பாடசாலைக்கு நேரில் வந்து அதன் தேவைகளை ஆராயவதாகவும் தெரிவித்த அவர், பாடசாலையின் அபிவி ருத்திக்கு 150000 ரூபா நிதி யினை ஒதுக்கீடு செய்வதாகவும் குறிப்பிட்டார்.

நேற்றைய விளையாட்டுப் போட்டி நிகழ்வில் தென்மராட்சி வலய உடற்கல்வி அதிகாரி சிவ குமார் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவன பதில் பொறியியலாளர் சுமத்திரன், கொடிகாமம் மக்கள் வங்கி முகாமையாளர் சிறிதரன் மற்றும் ஈ.பி.டி.பி.யின் தென் மராட்சி பிரதேச பொறுப்பாளர் வலன்டீன் பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பெண்கள்மீது துஷ்பிரயோகம்; வசமாக மாட்டினார் இளைஞர்

(கொழும்பு)

தொலைபேசி அழைப்புக்கள் மூலம் இளம்பெண்களை ஏமாற்றி விடுதிகளுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோ கம் செய்ததாக குற்றஞ்சாட்டப் பட்ட நபரை பெப்ரவரி 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மாவட்ட நீதிபதி ஜகத் ஏ. கஹதகமகே உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை மாணவி ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் சிலாபம் பொலி ஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

தொலைபேசி இலக்கத்தை வைத்தே பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ள னர். சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

# கடத்தலில் பொலிஸ் உத்தியோகத்தர்; அநுராதபுரத்தில் கைதுசெய்யப்பட்டார்

(கொழும்பு)

இருபத்தைந்து மரக்குற்றி களை சிறிய ரக லொறியொன் றில் அநுராதபுர நகரினூடாக சட்டவிரோதமாக கடத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு வரும் மற்றொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரிவு நான்கிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ஜயந்த கமகே தெரிவித்தார்.

சட்டவிரோத கடத்தல் தொடர் பாக பொதுமக்கள் பொலிஸா ருக்கு வழங்கிய தகவலை யடுத்து விசேட பொலிஸ் குழு வினரால் இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் நேற்றுக் காலை அநுராதபுர நீதி வான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதாக கமகே மேலும் குறிப்பிட்டார்.

# புத்தளத்தில் தங்கக் கொள்ளை வசமாக மாட்டிய மூவர் கைதாகினர்

(கொழும்பு)

புத்தளம் பிரதேச தங்க விற் பனையாளரிடமிருந்து தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் புத்தளம் பகுதி யிலுள்ள தங்க விற்பனையாள ரிடமிருந்து 1120000 பெறுமதி யான தங்க ஆபரணங்கள் மற் றும் 5500 ரூபா பணம் என்பன முச்சக்கரவண்டியில் வந்த நான்கு கொள்ளையர்களால் கொள்ளை யிட்டுச் செல்லப்பட்டிருந்தது.

இவர்களில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களில் 8 லட்சம் பெறு மதியான ஆபரணங்களும், முச் சக்கர வண்டியும் சந்தேகநபர் களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள் ளன.

# வடக்கின் மீள்கட்டுமானம்....

தேவைகளும் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது குறித்தும் இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்தி உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கை நிலைவரம் தொடர்பில் ஆராய்வ தற்காக விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் லெம்பர்ட் தலைமையில் கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்ற ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவில் ஆறு நாடுக ளைச் சேர்ந்த ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன குழுவொன்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இத் தூதுக்குழு நாடாளுமன்றத்தின் சபாநாய கர் சமல் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள் ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

படைத்துறை அமைச்சின் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுடனான சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது.

வடக்கில் வவுனியா, மெனிக்பாம் மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததுடன் போருக்குப் பின்னரான நிலைமைகள் தொடர்பி லும் ஆராய்ந்தோம். அங்கு மக்களுக்கு தேவை யானவற்றை உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங் களும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னெடுத்து வருகின்றன.

வடக்கில் கண்ணிவெடி அகற்றல், கல்வி நிகழ்ச்சிகள் மேம்படுத்தப்படுகின்றன என்பதுடன் ஐரோப்பிய ஒன்றியமும் அதிகமான வேலைத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

இவ் விஜயத்தின் போது போருக்குப் பின்ன ரான நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத் தியுள்ளோம். மீள் உருவாக்கம் மற்றும் மீள் அபிவி ருத்தி தொடர்பில் எங்களுடைய அவதானிப் புகளை செலுத்தியுள்ளோம். உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப் பணிகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். அதன் தேவைப்பாட்டை மக்கள் உணருகின்றனர்.

நீதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டு வதற்காக தமிழ்மொழி தெரிந்த பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர்.

ஆனால் மேலதிக இராணுவ பிரசன்னம் தொடர்பில் மக்கள் எம்மிடம் கேள்வி எழுப்பினர். இந்த விடயம் தொடர்பில் படைத்துறை அமைச் சின் செயலாளருடன் கலந்துரையாடினோம்.

வன்னிப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில் எங்கும் கலந்துரையாடப்பட வில்லை என்றாலும், மனித உரிமைகள் மீறப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அக்கறை கொண்டுள்ளது. மேலதிகமான இரா ணுவ பிரசன்னம் மற்றும் தடுப்புக்காவலில் இருப் போர் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண் டும்.

முரண்பாடுகளுக்கு பின்னர் வடமாகாணத்தில் எவ்வாறான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படு கின்றன என்பது தொடர்பில் வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடினோம். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற குழுவிற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் குழுவிற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. எமது செயற்றிட்டங்கள் தொடர்பான பரிந்துரைகளை அறிக்கையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அதேவேளை, தடுப்புக் காவலில் உள்ளவர்கள் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பன குறித்து நாம் அக்கறை கொண்டு செயற்படுகின்றோம். நாடாளுமன்றத்திற்கான எமது விஜயத்தின் போது அவசரகாலச் சட்டம் மற்றும் அரசியல்வாதிகள் குறித்து விவாதிக்கப்பட்டதை நாம் அவதானித் தோம்.

தடுத்து வைத்திருப்பதற்குள்ள உரிமை அல் லது அதிகாரம் ஆகியவற்றின் கீழ் பொலிஸார் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டி ருக்கலாம் எனக் கருதுகின்றோம்.

சில பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை நாம் அவதா னித்தோம். அரசாங்கம் மெச்சத்தக்க வகையில் அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்ற நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது. என்றாலும் மோதல்கள் முடிவடைந்த பின்னரான காலப்பகு தியில் இயல்பு நிலைமை மீளத் திரும்புவதில் சவால்கள் காணப்படுகின்றன.

மீள்குடியேற்றப் பணிகளை துரிதப்படுத்துமாறு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்ற அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியமும் துரித மீள்குடியேற்றத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டிற்கான எமது குழுவின் விஜ யத்தின் போது, அரசாங்க அதிபர், ஆளுநர் போன்ற தரப்பினரை சந்திக்கக் கிடைத்தது. அங்கு மூன்று திட்டங்கள் குறித்து பேசப்பட்டது. கண்ணி வெடி அகற்றல், கண்ணிவெடி குறித்த விழிப்பு ணர்வு, இடைக்கால தங்குமிடங்கள் குறித்தே இதன் போது கலந்து பேசப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

# இரத்தினபுரம் கிராமத்தில் முன்பள்ளி அமைக்கத் திட்டம்

(கிளிநொச்சி)


கிளிநொச்சி - இரத்தினபுரம் கிராமத்துக்கு முன்பள்ளி ஒன் றினை அமைத்துத் தருவதற்கு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப் பினரும், நாடாளுமன்றக் குழுக் களின் தலைவருமான முருகேசு சந்திரகுமார் உறுதியளித்துள் ளார்.

கடந்த வியாழக்கிழமை இரத் தினபுரம் கிராமத்தின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு அக்கிராம மக்களின் தேவைகள் தொடர் பாக கேட்டறிந்தபோது இரத் தினபுரம் கால் ஏக்கர் திட்டத்தில் முன்பள்ளி ஒன்றினை அமைத் துத் தருவதாக உறுதியளித்தார்.


மேலும் கால் ஏக்கர் திட்டத் தில் மேய்ச்சல் தரவை எனக்கூறி 18 வரையான காணிகளிலிருந்து பொதுமக்களை வெளியேறு மாறு அரச அதிகாரிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந் தது.

இது தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தமையினைத் தொடர்ந்து அப்பகுதி மக்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்க நட வடிக்கை எடுப்பதாகவும் உறுதி யளித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவ நாதன், கிளிநொச்சி அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் ஆகி யோர் கலந்துகொண்டனர். (69)



# எமது மக்களின் தலைவிதியை நல்ல முறையில் மாற்றியமைக்கக் கூடிய தலைவர் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் தலைவிதியை நல்லமுறையில் மாற்றியமைக்கக்கூடிய சிறந்த தலைவராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விளங்கி வருகின்றார் என சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தேவதயாளன் தெரிவித்தார்.

பாடசாலைக்கான நீர்விநியோகம், மின்சாரம் வழங்கல் மற்றும் ஆரம்ப சுகாதார வசதிகள் கட்டட கையளிப்பு நிகழ்விற்கு நேற்றுத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றுள்ள சூழ்நிலையில் எமது மக்களின் தலைவிதியை நல்ல முறையில் மாற்றியமைத்து அதன் மூலம் வளமான தொரு எதிர்காலத்தை நிலை நாட்டக் கூடிய தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே விளங்கி வருகின்றார்.

அத்துடன் மக்களின் துயர் துடைப்பவராகச் செயற்பட்டு மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டு உழைத்து வருகின்றார் என்பதுடன் குறிப்பாக, ஏழை மக்களின் தோழனாகவும் இருந்து வருகின்றார்.

சமூகத்தின் மீது பற்றுக் கொண்டவராக அவர்களது அடிப்படைப் பிரச்சினைகள் தேவைகள் தொடர்பில் அதிக அக்கறையுடன் உழைத்து வரும் நிலையில் இந்தப் பாடசாலையின் பல்வேறு தேவைகளையும் அமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்து இந்த மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் மேலும் மேலும் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் அடங்கிய குழுவினரை பாடசாலைச் சமூகத்தினர் வரவேற்று நிகழ்விடத்திற்கு அழைத்து வந்தனர்.

அங்கு மங்கள விளக்கு ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நீர்த்தாங்கிக்கான பெயர்ப் பலகையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திரை நீக்கம் செய்து வைக்க, சுகாதார வசதிகள் கொண்ட கட்டடத்தின் பெயர்ப்பலகையினை சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி திரைநீக்கம் செய்து வைத்ததார். பாடசாலைக்கு தமது சொந்தப் பணத்தில் மின்னிணைப்பைப் பெற்றுக் கொடுத்த சமூக நலன் விரும்பி திருமதி பாக்கியம் நல்லையா மின் அழுத்தியை அழுத்தி மின்வழங்கலை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து பாடசாலை அதிபர் தேவதயாளன் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் சிவசக்தி சனசமூக நிலைய போசகர் கந்தசாமி ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உரையாற்றுகையில்,

பாடசாலை சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பாடசாலைக்கான முகப்பு மதில் அமைத்து தருவதாகவும் ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் குறிப்பாக கணினிகள் கணினிக் கூடம், சுற்றுவேலி அமைப்பது தொடர்பில் மிகுந்த கவனம் எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்பில் நினைவுப் பரிசினை வலிகாமம் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம் வழங்கி கௌரவித்தார். தொடர்ந்து அங்கிருந்த சிறார்களுக்கு அமைச்சர் அவர்கள் இனிப்புப் பண்டங்களைப் பரிமாறினார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் வலிகாம பிரதேச இணைப்பாளர் ஜீவன், மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா), ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# "பணத்திற்காக வேலை" செயற்திட்டம் அம்பாறையில் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை துரிதமாக கட்டியெழுப்ப "பணத்திற்காக வேலை" எனும் வேலை வாய்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளவும் கட்டியெழுப்ப அரசாங்கம் துரிதமாக நடவடிக்கையினை எடுத்துள்ளது எனவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும், விவசாயிகளுக்கு அடுத்த போகத்திற்கு தேவையான விதை நெல் மற்றும் உரம் என்பன இலவசமாக வழங்கப் படவுள்ளன என பசில் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராயும் உயர்மட்ட மாநாடு நேற்றுச் சனிக்கிழமை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுனில் கன்னங்கரா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதில் சிரேஷ்ட அமைச்சர் பீ.தயாரட்ன, அமைச்சர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, எஸ்.எம். சந்திரசேன, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, சிறியாணி விஜேவிக்கிரம, எச்.எம்.எம்.ஹரீஸ், பைசால் காசீம், பீ.பியசேன, அனோமா கமகே, கிழக்கு மாகாண ஆளுனர் மொஹான் விஜேவிக்கிரம, கிழக்கு மாகாண அமைச்சர்களான விமலவீர திஸாநாயக்க, எம்.எஸ்.உதுமாலெவ்வை, ரி. நவரட்னராஜா மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கறுப்புச் சந்தையில் விலைபோகும் உலகக்கிண்ண நுழைவுச் சீட்டுக்கள்

## பொலிஸார் வலை விரிப்பு

(கொழும்பு)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டுக்களை கறுப்புச் சந்தையில் விற்பவர்களைக் கைது செய்வதற்காக விசேட குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது போன்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக பொலிஸார் இலங்கை கிரிக்கெட் சபைக்யுடன் இணைந்து செயற்படவுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு குற்றப்புலனாய்வுபபிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து, இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண போட்டிக்கான 50 ரூபா பெறுமதியான நுழைவுச்சீட்டை 1,300 ரூபா முதல் 1,500 ரூபா வரை விற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண செயலக ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எகிப்து அரசாங்கத்தின் நிலை இலங்கை அரசுக்கும் நெருங்குகிறது

(கொழும்பு)

எகிப்து ஜனாதிபதி முபாரக்கை மக்கள் விரட்டி அடித்தது போல், இலங்கை அரசாங்கத்தையும் விரட்டியடிக்கும் காலம் நெருங்கிவிட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எம்.இப்றாகீம் தலைமையில் காத்தான்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய சோமவன்ஸ அமரசிங்க,

எகிப்தில் நடந்தது போல இலங்கையிலும் மிக விரைவில் நடக்கும். மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாக எவரும் கூறமுடியாது.

மக்கள் விடுதலை முன்னணியிடம் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை வழங்கினால் நேர்மையாகவும் நீதியாகவும் செய்து காட்டுவோம்.

இந்த ஆட்சியை மாற்றி நேர்மையான அரசைக் கொண்டு வர அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்


# மரண அறிவித்தல்



## காசிநாதன் கணபதிப்பிள்ளை
(K.K)

காரைநகர் குமுளங்குழியைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் கணபதிப்பிள்ளை 24.02.2011 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் காசிநாதன் (ஆசிரியர்) சரஸ்வதி தம்பதியரின் ஏக புத்திரனும், பாலாவோடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா ஆறுமுகம் (அதிபர்)-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ் வரியின் அன்புக் கணவரும், சுபேதினி, பிரதீபன், தயாளினி, அனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நகுலேஸ்வரன், மோகனேந்திரன், சிவதர்சன் ஆகியோரின் அன்பு மாமனும் விதுஷன், சாளினி, லக்ஷன், லக்சிகா, பவிஷா, நிந்துஜா, ஹரணி ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வரத்தினம், நேசரத்தினம், கனகமலர், கமலாம்பிகை, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிகு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமுளங்குழி,
காரைநகர்.

(107)

தகவல்:
குடும்பத்தினர்.


## வடக்கில்...

பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதற்கு இன்னமும் 18 மாத காலம் தேவைப்படும் என அறிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளில் தமிழ் யுவதிகளும் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## தென்கிழக்காசிய....

நெருக்கடி நாடுகளுக்கிடையே ஒரு ஆபத்தான அழிவுத்தடத்தை விட்டுச் சென்றுள்ளதுடன், உலக நிதிக்கட்டமைப்பின் ஆணி வேர்களையே ஆட்டம் காணச் செய்துள்ளது.

உலகப் பொருளாதார சூழலில் தற்போதைய சிக்கலான நிலைமையை நீடித்துநிலைக்கும் விதத்தில் முகாமைத்துவம் செய்வதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக நாம் கொழும்பில் ஒன்று சேர்ந்திருக்கிறோம்.

உண்மையாக இந்த முயற்சியில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் எமது உண்மையான பங்காளர்களான எமது மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதி நிதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, மத்திய வங்கி ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால், சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவ பணிப்பாளர் நொயிக்கி சினோகரா, கம்போடிய தேசிய வங்கி ஆளுநர் சியா சன்டோ உள்ளிட்ட தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்களும் பங்குகொண்டனர்.

## யாழ். மாவட்ட....

நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த ஆளணியும் மேலதிக வளங்களும் அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர்கள், மேற்படி ஆளணியும் வளங்களும் கிடைக்கும் பட்சத்தில் `தற்போதைய பணிகளை துரிதப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரியப்படுத்தினார். பிராந்திய மிதிவெடி செயற்பாட்டுப் பணிமனை அதிகாரிகளுடனான அமைச்சரவர்களின் சந்திப்பின் போது அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமாரும் உடனிருந்தார்.

## யாழ். நகரில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாரிகால ஒக்டோபர் மாதம் 43 ஆகவும், நவம்பர் மாதம் 34 ஆகவும், டிசெம்பர் மாதம் 60 ஆகவும் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை காணப்பட்டதாகவும் அப்புள்ளிவிபரங்கள் மேலும் தெரிவித்தன.

(பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.